[illegible]

V 5. No. 16 21 [illegible] 1932

3L
[illegible]211, N28 KN
M82.5.16.
[illegible]

KALANILAYAM

தனிப்பிரதி விலை, அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

5 - JUL 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஷ ஏப்ரல் மீ 21உ [No. 16

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 301
2. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 303
3. பொருளாசை—C. சுந்தர ஐயர் B. A. 305
4. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 306
5. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (தாற்பருவம்)
கி. வெங்கடசாமி ரெட்டியார் 310
6. வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்)
T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 311
7. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 8ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 314
8. அப்பர் (64 கலை—தர்க்கம்—சப்தப்ரமாணம்)
E. N. தணிகாசல முதலியார் B A. B.L. 315
9. சொல்லூடாட்டம் 317
10. வர்த்தமானம் 319

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 8.

இதுகாறும் பொதுப்பட இயங்கும் வித்தகத்தின் இலக்கணம் ஈதென ஒருவாறு இயம்பிவந்தோம். தனிப்பட நின்றிருந்து தன்வரையில் விதியினை ஆட்கொள்ளவல்ல வித்தகத்தின் வரலாறு இதுபோன்ற தன்மையதாய் அமைந்திருக்க, அகலிடையிம் மாபெருவுலகந்தன்னில் ஒருங்குறக்குழுமிச் செல்லும்மானுட விதிகளினூடுநடமாடும்வித்தகத்தின்வகையினை இனிச்சிறிதிங்குக் காணலாம். இதனை ஆராய்ந்தறியவேண்டியது மிகவும் இன்றியமையாததே. ஏனெனில் வித்தகன் ஒருவனுடைய விதிதானும், வம்பமாக்கள் தூர்த்தர் விடர் அனைய சிற்றினக்கயவர்தம் விதிகளினின்று முற்றிலும் விலகிநிற்க இயல்வதில்லையே. ஏவரெவர் விதிகளும் என்றென்றும் ஒன்றுகூடிக் கலந்தவண்ணமாகவே யிருக்கின்றன. வன்தாளின் இணைவணங்கி வளநகரம் தொழுதேத்த மன்னனாவான் நின்ற தன் மைந்தனை நெடுங்கானம் படரப்போக்கித் தானும் இடுகாடு சென்றடைந்த தயரதன் உற்றதே யனைய பேரிடர்கள் விளைவது வித்தகர்தம் விதிகளுக்குப் புதுமையன்று. உத்தமர்களில்இங்கு இவனொப்பான் புண்ணியப் பெருந்தகை வேறு யாரே உளரென்ன உயர்ந்து நின்ற தயரதனுக்கு இன்னதோர் கொடுவிதி உடற்ற வந்த வரலாற்றின் உண்மையை உணரவேண்டுமென்னும் அவாக் கொள்ளாதார் அறிவிற் கடையாவார் இனத்தினுட்டானே காணப்படுவர். எனினும் இதுவிந்தை நீங்கி இயற்கையாவது மிக எளியதே.

சுனச்சேபனைச் சிந்தனை சிறிதுமின்றிக் கொன்ற நாள் அவன் இருமுது குரவரும் இட்ட சாபந்தான் இன்று இவ்வுருவில் வந்து தொடர்ந்து உழக்கியதென்னும் பழிபடு கதையைச் சற்றே மறந்து சோதிப்போமாயின் தயரதனைத் துயர்செய்ய வந்தது அவன் விதியே என்பதனினும், இலங்கையின்கண் ணிருந்த இராவணன்தன் விதிதான் இத்தயரதனுடைய துன்பத்திற்குக் காரணமாயிற்று என்பதும் சாலப்பொருந்தும். ஆதலின் அங்குஇராவணன்தன்புன்விதி இங்குத் தயரதன்தன் நன்மதியுள் மயங்காநின்றது. எனின், தயரதனுடைய வித்தகத்தால் விளைந்த பயன் யாதென அயிர்த்தலும் இயலும். இது, துண்ணெனத் தோன்றிக் கதுவிய விதியாகும்; மிக்க கொடுமையும் வாய்ந்தது. இவ்வாறின்றி, பார்ப்பதற்கு இத்துணைப் பயங்கரமில்லதாய் மெல்லமெல்லத் தொடர்ந்து துயர்மிகச் செய்யும் விதியினுக் காளாகிக் கவல்கின்ற வித்தகர்களும் உளர். விதனங்கள் உண்டோ இல்லையோ என்பதைமட்டும், கயமைக்கும் வித்தகத்திற்கும் இடைநின்ற வேற்றுமையாய்க் கொள்ளலாகாது. இந்த இலக்கணத்தையே ஆதாரமாகவைத்துச் சோதிக்கப் பயில்வதெல்லாம் நம்முடைய வாழ்க்கையை அவலமாக்கி அழிப்பதற்குரிய அடிப்படையாகின்றது. இருதிறத்தோர்க்கும் பெரும்பாலும் விதனம் ஒன்றே. ஆயினும், அவ்விதனத்தைத் தூண்டிநிற்கின்ற பொருள்களின் தன்மை அளவு முதலியவைகளில் மாத்திரமேயன்றி, அவ்வவ்விதனங்களை யடையநேர்ந்தவர்தம் வாழ்க்கையிலும் வேற்றுமை பெரிதுளது. தூர்த்தர் துயர்கூர்ந்தக்கால், நன்மையைக்கண்டு நாணி நடுங்குவார். நன்மையைப் பேணிக்கொள்வோம் என்னும் நோக்கம்

அவருக்கு எழுவதில்லை. வித்தகர்களும்வருந்துகின்றாரெனினும், வாய்மையையும் நீதியையும் அன்பையும் எதிர்கொண்டழைத்துவந்து அளவளாவ இவர் அஞ்ச மாட்டார். இது நிற்க,

ஏனையோர் விதிகள் நடைபெறுவதற்கு நியங்கள் வேண்டி, வித்தகர்களுடைய விதிகளும் தாக்கப்பெறலாம். எனின், இச்செவ்வியில் ஒருகேள்விஎழுதல்இயலும். வித்தகர்தாம் மற்றவர் நலமுற விதிகளை மாற்றிவைத்தல்ஆகாதோ எனஐயுறவெய்தலாம். இதற்கிடையில் வித்தகத்தின் ஊதியந்தான் யாதென்னும் வினாவொன்றும்பிறத்தல் இன்றியமையாததே. இவ்விரண்டிற்கும், மாரிஸ் மேடர்லிங்க் என்னும் அந்தப் பெல்ஜியதேயத்து ஆசிரியர் ஒருங்கே கூறுகின்ற விடையினை, இங்குக் கருத்துட் கொள்வது நலம்:—

"Those who speak of the profits of wisdom are never so wise as when they freely admit, without pride or heart-burning, that wisdom scarcely grants a boon to her faithful that the foolish or the wicked would prize. And indeed it may often take place that the sage, as he moves among men, shall pass almost unnoticed, shall affect them but slightly; be this that his stay is too brief, that he comes too late, that he misses true contact; or perchance that he has to contend with forces too overwhelming, amassed by myriad men from time immemorial. No miracles can he perform on material things; he can save only that which life's ordinary laws will allow to be saved; and himself it may be, shall be suddenly seized in a great inexorable whirlwind. But, though he perish therein, still does he escape the fate that is common to most; for at least he will die without having been forced—for weeks, or it may be for years, before the catastrophe—to be the helpless, despairing witness of the ruin of his soul. And to save someone—if we admit that in life there are really two lives—does not of necessity mean that we save him from death and disaster; but indeed that we render him happier, in as much as we try to improve him. Moral salvation is the greatest salvation; and yet, what a trifle this seems, as everything seems that is done on the loftiest summits of soul. Was the penitent thief not saved; and that not alone in the christian sense of the word, but in its fullest, most perfect meaning? Still had he to die, and at that very hour; but he died eternally happy; because at the very last moment he too had been loved, and a Being of infinite wisdom had declared that his soul had not been without value, that his soul, too, had been good, and had not passed through the world unperceived of all men.

As we go deeper down into life we discover the secret of more and more sorrow and helplessness. We see that many souls round us lead idle and foolish lives, because they believe they are useless, unnoticed by all, unloved, and convinced they have nothing within them that is worthy of love. But to the sage the hour must come when every soul that exists claims his glance, his approval, his love—if only because it possesses the mysterious gift of existence. The hour must come when he sees that falsehood and weakness and vice are but on the surface; when his eye shall pierce through, and discover the strength, and the truth [illegible] that lie underneath. Happy [illegible] blessed hour when wickedness stands forth revealed as goodness bereft of its guide; and treachery is seen to be loyalty, for ever astray from the highway of happiness; and hatred becomes only love, in poignant despair, that is digging its grave. Then unsuspected of any, shall it be with all those who are near the good man as it was with the penitent thief; into the humblest soul that will thus have been saved by a look, or a word, or a silence, shall the true happiness fall—the happiness fate cannot touch; that brings to all men the oblivion it gave unto Socrates, and causes each one to forget, until nightfall, that the death-giving cup had been drained ere the sun went down.

அறிவிலிகளும் சிற்றினக் கயவர்களும் மதித்துணர்தற்குரிய ஊதியம் ஒன்றும் வித்தகமுடையோர் அவ்வித்தகத்தால் எய்துவதில்லை என்னும் உண்மையைச் சாற்றுகின்ற இப்பேரறிஞர்வாக்கியத்தைப் பன்முறை மனனஞ்செய்து தேர்ந்துகொள்ளல் வேண்டும். வித்தகம் வித்தகம் என்று விளம்பிநிற்றலால் விளைந்த பயன் யாது என வினவுகின்ற இழுதைவாய்களுக்கு இட்டதோர் விலங்கு இவ்வாக்கியத்திலும் வலியது வேறில்லை. ஊதியம் ஒன்றும் இல்லாமையே ஒன்றன் பெருமைக்குப் பொதுவற நின்ற அறிகுறியாகும். அவருக்குத்தான் இல்லையெனில் ஏனையோர்க்கேனும் உளதோ என்பதற் கதன்பின் எதிர்விளம்புகின்றார். இடுக்கண் இடுகாடுகளினின்று காத்தற்கியலாக் காலையிலும், இடுக்கண்களி னிடையேயும் இடுகாட்டிற் கருகிலேயும் மனிதர் மனத்தகத்தே சிறிதேனும் அமைதி பிறக்கும்படி புரியவல்லவர் வித்தகர்களே யாதலின், அவ்வுதவிக்கு இணையாயது எங்கும் இல்லையே. ஆங்கில நூற்பயிற்சி யுள்ளவர்கள், ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் என்பவர்தம் கருத்தும் இதுவே யாவதை இங்கு நினைத்துக்கொள்வார். அறம் மறம், அன்பு வன்பு, திண்மை நொய்ம்மை, அனைய எதிர்நிலைத் தொடர்கள் வேறுவேறாகிய ஆற்றல்களை விளம்புவனவல்ல. உண்மை யுணர்ந்து உப்பாரிலாத அறந்தானே மறமெனத் தோன்றுகின்றது. இன்பத்தை அடைதற் கேகுமவன் அன்பின் துணையிழந்து தவறிச் செல்லும் நெறியே வன்பு. இதனை யறியும் திண்மையை நம்பாமல், அறத்தினின்று வேறாப ஆற்றல் மறம் என்றும், அன்பினின்று வேறாய ஆற்றல் வன்பென்றும் திரிபு கொண்டு தளர்வதே நொய்ம்மையாகும். வித்தகர் இம் மனநிலையை மாந்தருக்கு எய்துவிப்பார். இந்நிலை எய்துதனினும் உயர்ந்ததோர் ஊதியம் உலகிற்கில்லை. எனினும், ஆன்ம உணர்வினது உன்னத சிகரங்களில் உதிக்கும் மற்றெல்லா ஒளிகளையும் போலவே இச் சமரச வித்தக நன்னிலையும் கல்லாத மாந்தர் கண்களுக்கு அற்பமாகவே தோன்றும். எனினும், தாம் பெரிதெனப் பாராட்டிப் பின்தொடர்ந்த மற்றவைகளால் பெற்ற பயன் யாதென்பதை உற்றுணர்ந்துகொள்ளும் ஊக்கமும் பயிற்சியும் உடையராயின், இது அற்பமன்றென்பதை அறிந்து கொள்ளல் அருமையாகாது.

ஆவதாகுக. ஒரு சொல்லால், ஒரு பார்வையால், மௌனத்தால், வித்தக நன்னிலை யெய்திய மேன்மக்கள், தம்மை வந்தடைந்த மாந்தரை இன்பநெறிக் குரியவராக்குவார் என்ற மாடர்லிங்க் நம் தாயுமானவர் முதலிய பெரியோர் வாக்கினிற் குடன்பட்டிருக்கின்ற வாய்மை கருதுதற் குரியது.

18864

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — அண்ணன்மார் வரலாறு

[284-வது பக்கத் தொடர்ச்சி]

கணவனும் மனைவியும் தாம் பெற்ற வரத்தின்படி ஆண்குழந்தைகள் பிறவாமையைக் கண்டு வருந்தினர்; ஆயினும் மிக்க அழகுடைய ஒரு பெண்மகவு தமக்குக் கிடைத்ததேயென்று ஒருவாறு தேறி, அதனைப் போற்றிவளர்ப்பா ராயினர்.

தாமரை, தன் பிள்ளைக்கலி தீர்க்கவந்த அருமைப் புதல்வியை நீராட்டித் திருநீறும் நிலக்காப்பு மிட்டுக் கண்ணுக்கு மைதீட்டி, அழகு கண்டு வாரியெடுத்து முத்தமிட்டுப் பொன்னூஞ்சலிலே கிடத்தி,

> முத்தே நவமணியே முழுநிலக் கோமளமே
> சத்தி யருளாலுதித்த சந்ததியே கண்வளராய்;
> திருவளர் பொன்னம்பலத்தில் * செய்திருந்த [மாதவத்தால்
> பரமனருளால் வந்த பாவையே கண்வளராய்;
> தேனே மரகதமே தித்திக்குஞ் செங்கரும்பே
> மானே யென்கண்ணே மதலையே கண்வளராய்.

என்று பலபடப் புகழ்ந்து தாலாட்டுவாள். மகளுக்குத் தலையில் வர்ணமணிக் குப்பிவைத்து, நெற்றியில் இரத்தினச்சுட்டி தொங்கவிட்டு, மார்பில் நன்முத்துமாலை அணிவித்து, கையில் பொற்காப்புப் போட்டு, காதில் மத்தியங்காயும்மேல் முருகும்குழையும்மாட்டி, சிற்றிடையில் பொன்னரைஞாண் கட்டி, காலில் சிலம்பும் தண்டையும் சதங்கையும் புனைந்து, அவளது பேரழகு கண்டு மகிழ்ந்து, இனித் தன்னை மலடியென்று வையகம் ஏசாதென உவந்து மகளைச் சிறப்பாக வளர்த்து வந்தாள்.

அண்ணன்மாரும் தங்கையும் பிறந்த அன்றே, தாமரைநாச்சியின் அடிமைப் பறைச்சிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது தெய்வவரத்தா லுதித்தமையால் கண்டோர் அஞ்சும் உருவமும் வலியும் வாய்ந்து, அதன் தாய்க்குச் செல்வக் குழந்தையாய்ச் சேரியில் வளர்ந்துவந்தது. அன்று குன்றுடையான் கொட்டிலில் அழகிய இரு குதிரைக்குட்டிகளும் பிறந்தன.

நிலவறையில் வளர்ந்துவந்த அண்ணன்மார், செல்லாண்டியம்மன் திருவருளால் எல்லா வித்தைகளையும் துறைபோகக் கற்றனர். வில்வித்தையிலும் வாள் வித்தையிலும் நிகரற்ற வீரர் ஆயினர்; யானையேற்றத்திலும் குதிரை யேற்றத்திலும் அளப்பரிய திறமை எய்தினர்; நாள்தோறும் செல்லாண்டியம்மன் அவர்கள் பக்கலிலிருந்து கற்பிக்க மல்யுத்தத்தில் கைதேர்ந்தவராயினர். இவர்கள் வரத்தாற்பிறந்தமையால் வயதுக்கு மீறிய வளர்ச்சியையும் தேகபலத்தையும் அறிவையும் ஆற்றலையும் பெற்றிருந்தார்கள். இவர்களில் மூத்தோன் ஈவும் இரக்கமும் பொறையு முடையோன்; இளையோன் கோபமும் வீரமும் துணிச்சலு மிக்கோன்.

இதுகாறும் பாய்ச்சலூர்த் தம்பிமார் சும்மா இருந்தவரல்லர். குன்றுடையானுக்கு வாய்த்த செல்வத்தையும் உயர்வையுங் கண்டு பொறாமைகொண்டு சமயம் வாய்த்தபொழுதெல்லாம் அவனுக்கு இடர்விளைத்து வந்தனர்.

இங்ஙனமாக ஒன்பது ஆண்டுகள் சென்றன. அண்ணன்மார்க்கும் தங்கைக்கும் பத்தாம் வயது நடக்கிற காலத்தில், பாய்ச்சலூரில் பங்காளிகளுடைய வேளாண்மை நாசமாயிற்று; பணமுட்டு அதிகரித்தது. செலவுக்கு வழியறியாதவர்களாய்ப் பங்காளிகள் கலக்க முற்றுக் கூடி ஆலோசித்து, குன்றுடையான் வீட்டைக் கொள்ளையடிக்கவேண்டுமென்று தீர்மானித்து, ஆட்களைத் திரட்டி யழைத்துக்கொண்டு சிற்றுலைப்பட்டணத்தை யடைந்தார்கள். குன்றுடையான் வீட்டைச் சுற்றி ஆட்களை நிறுத்தி, பங்காளிகள் வீட்டினுள்ளே நுழைதலும், குன்றுடையான் தம்பிமார்கள் தன் அரண்மனைக்கு வந்தார்களென்று மகிழ்ந்து, 'வாருங்கள்! வாருங்கள்! தம்பிமார்களே' என்று சொல்லி வாய்மூடுமுன், பங்காளிகள் அவன் கன்னத்தில் பளீர் பளீரென அறைந்து, மயிரைப் பற்றியிழுத்துக் கீழே தள்ளி, 'உன்பணத்தையும் நகைகளையும் ஒப்புவிக்கிறாயா அல்லது உன்னைக்கொல்வதா?' என்றுகேட்டு, கழுத்தைப்பிடித்துப் பிசைந்தார்கள். குன்றுடையான் கண்கள் பிதுங்க அவர்களைக் கையெடுத்துக் கும்பிட்டு, 'என் பணமும் நகையும் ஆகிய எல்லாவற்றையும் உங்களுக்கேஒப்புவித்துவிடுகிறேன். என்னைக்கொல்லாதீர்கள் உங்களுக்குப் புண்ணியம்' என்று சொல்லி யிரந்தான். 'அப்படியானால் உடனே உன் பெட்டியைத் திறந்து காட்டு, காட்டு', என்று சில பங்காளிகள் குன்றுடையானைக் கழுத்தைப்பற்றித் தள்ளிப் பெட்டியை நோக்கிப் போகையில், மற்றுஞ் சிலர் அந்தப்புரத்தில் நுழைந்து அங்கே மகளோடு பேசி விளையாடும் தாமரையை அணுகினர். இவர்கள் வருவதைக் கண்டு தங்கை அஞ்சித் தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். ஒருபங்காளி தங்கையின் கன்னத்தில் ஓங்கிஅறைந்து அவள் கரத்தைப் பற்றித் தரதரவென இழுத்தெறிந்தான். மற்றவர்கள் தாமரையை நோக்கி, 'இந்த முண்டையினால் அன்றோ நமக்கு இவ்வளவு கஷ்டமும் உண்டாயிற்று! இவள் பல்லை உடையுங்கள், இவள் முகத்தில்அறையுங்கள்' என்றுவெகுண்டுகூவி, அவளை நைபப்புடைத்து, குன்றுடையான் பக்கலுக்கு இழுத்துக்கொண்டு வந்து, 'உங்கள் பணத்தையும் நகைகளையும் காட்டுங்கள்; காட்டாவிடில் இப்பொழுதே உங்களை மாய்ப்போம்' என்று அச்சுறுத்தினார்கள். கணவனும் மனைவியும் ஈரற்குலையைக் கையிற் பிடித்துக்கொண்டு தங்கள் பணத்தையும் நகைகளையும் ஒன்று விடாமல் வாரிவாரிக் கொடுத்தார்கள்.

இதற்குள் அரண்மனை முழுதும் அல்லோலகல்லோல மாயிற்று. ஊரார் திரண்டுவந்து சூழ்ந்தனர். சூழ்ந்தும் என்? பங்காளிகள் பொல்லாதவர்களென்று பயந்து வாளா இருந்தனர்.

பங்காளிகள் குன்றுடையான் வீட்டிற் கொள்ளையடித்த பணத்தையும் நகைகளையும் மூட்டை கட்டி ஆட்கள் தலைமீது வைத்து, குன்றுடையானையும் இழுத்துக்கொண்டு தெருவாசலுக்கு வந்தார்கள். தாமரை

* 'பொன்னம்பலத்தில்' என்ற சொற்பிரயோகத்தால், தாமரை தவங்கிடந்து வரம்பெற்ற தலம் சிதம்பரமே என்று கூறுவாரும் உளர்.

கைகளைப் பிசைந்துகொண்டு அவர்கள் காலில் வீழ்ந்து தன் கணவனை விட்டுவிடும்படி பலவாறு இரந்து கேட்டாள். ஒரு பங்காளி அவளது மார்பில் எட்டி உதைத்தான், அவள் மல்லாந்துவீழ்ந்து மூர்ச்சித்தாள். பங்காளிகள் குன்றுடையானை நடத்திக்கொண்டு பாய்ச்சலூர் போய்ச் சேர்ந்தார்கள்.

பாய்ச்சலூரார் குன்றுடையான் வீட்டைக் கொள்ளை யடிக்கையில், செல்லாண்டியம்மன் அண்ணன்மாருக்குப் படைக்கலப் பயிற்சி கற்பித்துக்கொண்டிருந்தார். பயிற்சியில், அம்மன், அண்ணனை ஒருதிருக்கம்பத்தண்டை நிறுத்தி, தம்பியை எட்டேர் அணைப்புக்கு அப்பால் நிறுத்தி, 'உங்கள் திறமையை நான் பார்க்க விரும்புகிறேன்' என்று சொல்லி, 'உன் அண்ணனைப் பிடி பார்ப்போம்' என்று தம்பியை நோக்கிக் கூறினார். தம்பி ஆர்ப்பரித்துத் திருக்கம்பத்தை நோக்கி ஓடினான். அண்ணனும் அவன் கையில் அகப்படாமல் கம்பத்தைச் சுற்றிச்சுற்றி ஓடி ஒளிந்தான். அண்ணன் பிடிபடாததைக் கண்டு தம்பி கண்சிவந்து தன் மந்திரவாளை எடுத்து வீசுதலும் அத்திருக்கம்பம் இரண்டு துண்டாய் வீழ்ந்தது; உடனே அண்ணன்மேற் பாய்ந்து அவனை இறுகப்பற்றி இழுத்துவந்து செல்லாண்டியம்மன் முன்னிலையில் நிறுத்தினான். அண்ணன் சிரித்தான். செல்லாண்டியம்மன் தம்பியைப் பார்த்து, 'அப்பா, கோபம் கொடியது. நீ இவ்வாறு கோபித்துக் கொள்ளுதல் தகாது' என்று புத்திகூறினார். அண்ணன் அம்மன் அடியில் வீழ்ந்து, 'தாயே, தம்பி அறியாதவன். அவனை மன்னித்தருளல் வேண்டும்' என்றான். தம்பியும் அம்மன் காலில் வீழ்ந்தான். அம்மன் இருவரையும் எழுப்பி ஆசிகூறினார்.

அண்ணன்மார் மீண்டும் அம்மன் காலில் வீழ்ந்து எழாது கிடந்தனர். செல்லாண்டியம்மன், அவர்களை நோக்கி, 'மக்களே, எழுந்திருங்கள், உங்களுக்கு உற்ற குறை யாது'? என்று வினவினார். அண்ணன்மார் அது கேட்டு, "தாயே, இதுகாறும் தாங்களே எங்களை வளர்த்து வித்தைகற்பித்தீர்கள். தங்களையே நாங்கள் தாய் என்று கருதி இருந்தோம். ஆயினும், ஒரு நாளாயினும் நாங்கள் எங்கள் தந்தையைப் பார்த்ததில்லை. எங்கள் தந்தையார் எங்கே? எங்களுக்குத் தகுந்தவிடை கூறியருள வேண்டும்' என்று இரந்தனர். அவர்கள் கேட்ட கேள்வியினால் பிள்ளைகளுக்கு அறிவு வந்ததென்று கண்டு, அம்மன், 'குழந்தைகளே, எழுந்திருங்கள். உங்கள் கேள்விக்கு விடையிறுக்கின்றேன்,' என்று கூறி, அவர்களைத் தம் கைகளால் வாரியெடுத்து நிறுத்தினார்.

பின்பு அம்மன், குன்றுடையான் பங்காளிகளிடத்தில் பட்ட கொடுமைகளையும், தாமரையை மணந்ததையும், பயிர்த்தொழில் செய்து பணக்காரனானதையும், பிள்ளைப்பேற்றின் பொருட்டுத் தவம் கிடந்து வரம் பெற்றதையும் அண்ணன்மாரைப் பங்காளிகள் கொல்லாதிருக்கும்பொருட்டுத் தாம், பரமனது கட்டளைப்படி நிலவறையில் வளர்த்ததையும், மற்றவற்றையும் விரிவாய்க் கூறி; 'மக்களே, உங்களுக்கு அறிவு வந்தது. இனி நீங்கள் உங்கள் தாய்தந்தையரிடம்போகலாம்' என்றார்.

தனது பெற்றோர்பட்ட அல்லல்களைக்கேட்ட சின்னண்ணன் சினந்தெழுந்து தன் மந்திரவாளை முன்னும் பின்னும் சுழற்றி, 'இதோ, இப்பொழுதே அப்பங்காளிகளை என் வாளுக்கு இரையாக்குகின்றேன்' என்று கொக்கரித்தான்.

அம்மன் அவனைக் கையமர்த்தி, 'குழந்தாய், பொறு பொறு; அவசரப்படாதே. ஒவ்வொன்றையும் தீர யோசித்துச் செய்தல் வேண்டும். உங்களுடைய பங்காளிகள் பொல்லாதவர்கள், பலவான்கள். அவர்கள் உங்களால் அவமதிக்கப்படும்காலமும்நெருங்கியுளது; நான் சொல்வதைக் கூர்ந்து கேளுங்கள். நீங்கள் பிறந்து வளர்ந்ததை உங்கள் தாய்தந்தையர்களேனும் பங்காளிகளேனும் அறியார்கள். நீங்கள் பிறந்தவன்றே உங்கள் தாயார் பெற்ற வரங் காரணமாக உங்கள் அடிமைப் பறைச்சிக்கும் ஒரு புதல்வன் பிறந்தான். அவன் உங்களுக்கு நிகரான பலசாலி. அவனைக் கைவிடாதீர். அவன் இப்பொழுது உங்களுடைய குதிரைகளை வேளாண்குளக்கரையில் மேய்த்துக்கொண்டிருக்கின்றான். அக்குதிரைகளும் நீங்கள் பிறந்தவன்றே பிறந்தவை; மிக்க வன்மையும் அழகும் வாய்ந்தவை. அவற்றை ஆளுக்கொன்று வைத்துக்கொள்ளுங்கள். மற்றும் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். இப்பொழுது உங்கள் பங்காளிகளால் உங்கள் தாய்தந்தையர்க்குச் சிறிது இடர்ப்பாடு உண்டாயது. நீங்கள் இருவரும் சென்று அவ்விடர்ப்பாட்டைக் களைவீர்களாக' என்றார்.

அண்ணன்மார் அம்மன் காலில் வீழ்ந்தெழுந்து, அவர் வாழ்த்திக் கொடுத்த மந்திரவாட்களைப் பெற்றுக்கொண்டு, வேளாண் குளக்கரையை நாடி விரைந்து ஓடிச்சென்று அங்கே பத்துவருடங்கள் தின்று கொழுத்த குதிரைகள் மேய்வதையும், அவற்றை மேய்க்கும் சாம்பானையுங் கண்டு மகிழ்ச்சியுற்று, நிலத்தில் வீழ்ந்து கும்பிட்ட சாம்பானை ஆசீர்வதித்துத்தாம் இன்னார் என்பதைச் சுருக்கமாய்க்கூறி அக்குதிரைகள் இரண்டையும் போர்க்குச் சித்தப்படுத்துமாறு கட்டளையிட்டு, கடிய வேகத்தோடு சென்று சிற்றாலைப் பட்டணத்தில் நுழைந்து ஒரு நொடிப்பொழுதில் தமது அரண்மனையை அடைந்தனர்.

உதைபட்டு வீழ்ந்து மூர்ச்சித்த தாமரையைக் கட்டிலில் படுக்கவைத்துத் தாதியர் சூழ்ந்து நின்று உபசரித்தனர். அவள் களைதெளிந்து கண் விழித்தாள். அப்பொழுது அண்ணன்மார் இருவரும் வழியில்நின்றவர்களை விலக்கிச் சென்று தமது அன்னையிருந்த மண்டபத்தில் நுழைந்தனர். அவர்களுடைய தலைப்பாகைகளையும், உடைகளையும், வாளாயுதங்களையும் கண்டு இராஜசேவகர்களென்றெண்ணிமருண்டு அங்கிருந்தவர்களும் தாதியரும் வழிவிட்டார்கள். அண்ணன்மாரிருவரும் நிலத்தில் வீழ்ந்து தாயைக்கும்பிட்டு எழுந்து, 'அம்மா, நாங்கள் உன் புதல்வர்கள். எங்களைக் கொல்ல வேண்டுமென்று பங்காளிகள் அனுப்பிய மருத்துவச்சொக்கியும் அறியாதவாறு செல்லாண்டியம்மன் எங்களை யெடுத்துச்சென்று இப் பத்து வருடங்களும் நிலவறையில் வளர்த்தார். மற்றைய செய்திகளைப் பின்னால் விளக்கமாகச் சொல்லுகிறோம். தந்தையார் எங்கே?' என்றார்கள்.

பொருளாசை

"இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்"

என்றென்றும் எவ்விடத்தும் மனவமைதிக்குஇடையூறாய்எல்லாரையும் நலியும்ஆசைகளில் பொருளாசை ஒன்று. அறநூல்கள் இயற்றிய ஆன்றோர் அனைவரும் பொருளை இருளென்று இடித்துரைக்கின்றனர். புலவர்கள், செல்வத்தை இகழ்வதையும், அர்த்தத்தால் வரும் அநர்த்தங்களை அடுக்கிக் கூறுவதையும், மானிடர்தம் மனத்தினின்று பொருளாசை அகன்றொழியச் செய்யும் பெரிய முயற்சியையும் பற்றிக் கற்றிருப்போருக்கு நான் பலபடஎடுத்துரைப்பது மிகை. ஆயினும், பொருளாசை நம்மைவிட்டு இந்நாள் நீங்கியதென்று சொல்ல ஒண்ணுமோ?நமக்குஅறிவுபுகட்டும்அப்பெரியோர்தாமும் அமயம் வாய்க்குங்கால் பொருள்ஈட்டிக் கொள்ளும் நோக்கம் உடையரே யன்றோ? அவர்கள் ஆன்ற அறிவோடு புனைந்து கூறும் மொழிகளை மனத்துட்கொண்டு எவரேனும் தாம் எய்தியுள செல்வத்தை அகற்றியதுண்டோ. அன்றேல், மனவமைதியை விரும்பித் தம் கைப்பொருளை வாரி இறைத்ததும் உண்டோ?

பொருளையும் அதிகாரத்தையும் பொருட்படுத்தாதவர்பலர் உளரெனினும், உற்று நோக்கின், அதற்குக் காரணம், அவர்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் இகழ்ந்ததேயன்று; அவற்றை அடைதற்கு இன்றியமையாத முயற்சியையும் உழைப்பையும் அஞ்சியதே காரணம் என்பது தெரியவரும். அவர்கள் மடி அகற்றித் தொழில்செய்யத் திறனற்று, மற்றவருடன் போட்டிக்குநிற்கப் பின்வாங்கி, பொன்விளையும் குன்றின் மேல் தம் முயற்சியின்றி ஏறி, பிறர்பொருளை யனுபவிக்கச் சித்தமாய் முன்னிற்பவர்களே.

மற்றும் சிலர், பெரிய பதவிகளைவிட்டுவிட்டு எளியவராய் ஒளிந்து வாழினும், ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் அதிகாரத்தை அகலவிட்டதற்குக் காரணம், அவ்வதிகாரம் தானேயகன்றமைதா னென்றும், தேடிவரும் பதவியைக் கைவிட்டது, அவ்வாறு செய்யாவிடில்விளையும் அவமானத்திற்கு அஞ்சியே என்றும் விளங்கும். அன்றாயின் இவர்கள் இவ்வாறு நடந்துகொள்வதற்குக் காரணம் வேறாயிருக்கலாம். சில மனிதர் ஒரேவிதவாழ்க்கையில் பொருந்தி நிற்பதில் இன்பம் காணாதுபோகவே வாழ்க்கைவகையை மாற்றுவதால் சுகமெய்தலாம் என்றெண்ணுவார். வேறு சிலர் இயல்பிலேயே அழுமூஞ்சிகளாய்ப் பிறந்ததால், வாழ்க்கையின் நாடகக் காட்சிகளை மாற்றினால் தம் மனவருத்தம் தீரலாம் என்று கருதுவர். அத்தகையோர் மனம், பெரு வாழ்க்கையாயினும் சிறு வாழ்க்கையாயினும், ஆறுதல் அடையாவண்ணம் நோய்கொண்டுளது. எல்லாக் கருமத்தையும் அகற்றித் தனித்திருப்பினும் அவர்களைக் கவலையும் வருத்தமும், தாம் நாடியது கைகூடவில்லையே என்ற ஏக்கமும் இடைவிடாமல் வேதனை செய்கின்றன.

செல்வவான்களும் செல்வம்சேகரிக்கவல்லவர்களும், பொருளையிகழ்ந்து கூறும் சான்றோர் மொழிகளை மதியாரெனினும், ஆன்றோர் அறநூல்கள் பயனற்றவைகளேயென்று மூடமுடிவு செய்யலாகாது. உலகில்வறுமையே பொரும்பாலும் உலவிநிற்கின்றது. "செல்வம் நிலையற்றது, அதனால் வரும் ஊதியமும் அற்பமானது, அதனை அடைந்தவர் எய்தியதுபோற் றோன்றும் உயர்வென்பதெல்லாம் மிகத் தாழ்ந்ததே" என்றென்று போதிக்கும் புலவர்கள், ஏழைகள் அனைவரும் பணக்காரரைப் பார்த்துப் பொறுக்காமற் படுகின்ற வேதனையை ஒருவாறு தணிக்கின்றார்களல்லரோ?

அறத்தின் சிறப்பினை வற்புறுத்திக்கூறும் சான்றோர், செல்வம் "சகடக்கால் போல வரும்" என்றும், "நின்றதே போல நீங்கும்" என்றும், "சாயையை யொத்த மாயை" என்றும், "குப்பை கிளர்த்தன்னது" என்றும், வாழ்க்கையாகிய நடனக்காட்சிக்குப் பொய்க்கோலம் செய்வதற்கே அமையும்என்றும், மனிதர்உண்மையாய மனவமைதியும் ஞானமும் வேண்டுவாரெனின் எளியோரைஅச்சுறுத்தவும்பார்த்தோர்கண்களைப்பகட்டுவதற்குமேஉதவுகின்ற இப்பொருளை ஒருபோதும்வேண்டாரென்றும் பலவாறு சாதித்திருக்கின்றனர். நமக்குக் கிடைத்தற்கரிய பொருளைப்பற்றிக் கவலைப்படக் காரணமில்லையென்று விளக்கி, செல்வம் எல்லோர்க்கும் சமமாய் அளிக்கப்படவில்லையே என்ற நமது ஏக்கத்தையும் குறையையும் நீக்கி, தூர திருஷ்டிக்குப் பெரியதாய்த்தோன்றும்பொருள் நம்மை அணுகவணுகச்சுருங்கிச் சிறியதாய் அதன் ஒளி குறைவதையும் எடுத்துக் காட்டி, உலகத்திற் பெரும்பாலோர்படும் அதிருப்தி என்னும் நோய்க்கு மருந்தளிக்கும் புலவர்கள் பயனற்றகாரியத்தைச் செய்கிறார்கள் என்று எண்ணுவது தவறு. பொருள் மருளே என்பதையும், ஊன்றி நோக்காத கண்களுக்கு வேகமாய்ச் சுழன்றுவரும் சாயைகளைக் காட்டி, அருகணையுங்கால் கையிலடங்காத அதன் தன்மையையும் தெரிவுறத் தோற்றுவித்து, ஞானமும் இன்பமும் தேடமுயல்கின்ற பெரியோர் செல்வத்தை ஒன்றாக மதிக்கமாட்டார் என்பதையுஞ் சாதிப்பது அறநூல்களின் கடமையாகும். அறநூல் சமயநூல்களில் கல்விகேள்வியில்லாமல் எல்லா விஷயங்களையும் தாமே நேராகப் பார்த்து அனுபவித்துத் தமது புத்தியாலேயே ஆராய்ந்துகொள்ள வல்லவர்களெனத் தம்மை மதித்திருப்பவர்கள், பெரிய பதவிகளில் இருப்பவர்களைத் தேவரென்று நினைக்கிறார்கள். வறுமையாலன்றி வேறு வகைகளில் வருந்தாத இவர்கள், செல்வமுள்ள விடத்தும் துன்பம் குடிகொள்ளுமென்றும், மற்றோரைப் பீடிக்கும் நோய்களும் கவலைகளும் செல்வர்க்கும் உண்டென்றும் எளிதில் நம்பமாட்டார்கள். அற்பரும் அறிவீனருமே இத்தப்பெண்ணங் கொண்டுழல்வபராக, அத்தகைய எண்ணம்உயர்ந்தோர் மாட்டுப் பரவாததற்குக் காரணம், அறநூலார் அவ்வெண்ணத்தைப் பலவாறு கண்டித்தும் அதன் பொய்ம்மையை விளக்கியும், அவ்வெண்ணம் பரவி எல்லாரையும் பீடிக்காத வண்ணம் சரித்திரங்களாலும்தரிசனங்களாலும், புரியும் மருத்துவத்தின் சக்தியே என்பது நமக்குப் புலப்படும்.

செல்வத்தை இகழுமிக் கொள்கை, மானிட அவாக்களைப் அவிக்காவிடினும், எளியோர் தம் நிலைமையை நினைந்து நைவதை நீக்கியும், பணமே பெரிதென்னும் பைத்தியத்திற்கு முற்றிலும் ஆளாகி அதனை அடைய முயல்வதில் ஏற்படும் எமாற்றம், சள்ளை கொள்ளை, திரட்டு புரட்டு, அடிதடி முதலியவைகளை ஒருவாறு அகற்றியும் நல்லுதவிபுரிகின்றது. ஆசையால்தூண்டப்பட்டுப் பணம் சேகரிக்கப்புகும் மனிதர் நன்மைதீமை நாடாதுதாம்செய்யும் முயற்சிக்கு ஏற்ற பயனுளதோவென்று நினைந்து தொன்றுதொட்டு வழங்கிவரும் நூல்களிற்செல்வத்தை இகழ்ந்து கூறியிருக்கும் ஆன்

ளோர் மொழிகளை ஒவ்வொரு வேளையேனும் சிந்திக்காமலிருக்கமுடியாது. அவ்வாறுசிந்தனை செய்யச்செய்ய, அவர்கள் தீய வழிகளில் இழியப் பின்வாங்குவார்கள். நம்மைவிட்டுச் செல்லும்போதுதான் செல்வம் நமக்கு உதவிசெய்கிறது. பொருளால் வாங்கக்கூடிய இன்பங்கள் சிலவே. உற்று நோக்கின், அவ்வின்பங்களை அருந்துவோரைப் பார்த்துப் புத்திமான் எவனும் ஆசைப்படமாட்டான், அழுக்காறும் அடையமாட்டான். தேக சௌக்கியத்தால் அடையக்கூடிய நன்மைகளைப் பணம்கொடுத்து நாம் வாங்கமுடியாது; யாக்கையைப் பீடிக்கும் நோய்களைப்பொருளால் அகற்றவுமியலாது. அன்றியும்,செல்வமானது, மனிதர்களை அளவுமீறி இன்பங்களை யனுபவிக்கும்படிசெய்து அதனால் நோய்களை விளைவித்து,அவர்கள் வலிகுன்றி நாள்கள்முதிராமுன் நமனுக்குஇரையாகக் காரணமாகின்றது. பொருளால் மனிதர்மனமும் புத்தியும் விளக்கமுறுகின்றன என்று சொல்லவொண்ணுமோ? பணம்படைத்தவர் பொருள் கொடுத்துப் புகழ்பெறலாம்; உழைப்பின்றி உறங்கலாம்;பொய்யைமெய்யென்றெண்ணிப் பொழுதுபோக்கலாம்; தமது மதியீனத்திற்கு ஊற்றம் செய்யலாம்.

பொருளோஉண்மைப்பெருமையை உண்டாக்கமாட்டாது. இயற்கையிலேயே சிறியதா யமைந்தவொன்றைப் பெரியதாக்கவல்ல ஆற்றல் எதற்குமில்லை. மன்னரும்,பிறவியிலேயேபெருமையும் நற்குணங்களும்பெற்றிராராயின்பொருளால் எவ்விதமேன்மையுமடையார். மேன்மைதங்கிய மன்னர்செல்வத்தால் சீரியராயினும், கீழ்மைவாய்ந்த அரசர்களோ பொருளால் கெடுகின்றனர். அரசாது பெயரைவைத்து அறிவில் உயர்ந்தோர்களே அரசுசெலுத்துகின்றனர். அரசரின் ஆட்சியோ அரண்மனையுள் அடங்கியிருக்கின்றது.

பொருளாசை நம் மனத்தைக் கவரும்பொழுது நாம் கவனித்துப் பார்த்து, செல்வத்தை விதிவசத்தாலோ தமது உழைப்பாலோ பெற்றவர்களுக்கு அப்பொருள்செய்யும் உபகாரம் என்ன என்று சிந்தனை செய்வோம். பொருள் படைத்தோர் அப்பொருளினால் நெருக்கப்படுவதையும்,அநேகசௌகரியங்கள் அமைந்துளவெனினும் அவற்றால் சுகமொன்றும் பெறாததையும், கருமமின்றிச் சும்மாவிருப்பினும் மனவமைதி அடையாததையும், பொறுமையின்றிச் சிறியவிஷயங்களிலும் சினமுறுவதையும், பிறரால் அவர்கள் இகழப்படுவதையும் வெறுக்கப்படுவதையும் நாம் சிந்திப்போமாயின், மானிடப்பிறவிக்கு இன்றியமையாத குறைகள் நீங்கப்பெற்றால், பின், கவலையுடனும் ஆசையுடனும் நாம் தேடவேண்டியது ஒன்றுமில்லை என்ற நிச்சயம் நமக்கு எளிதில் உண்டாகுமே.

தமிழ்ப் பாடம் 16.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[290-வது பக்கத் தொடர்ச்சி]

சோலையில் அன்னத்தின் பயனிலாச் சொற்பெருக்கிற்கு ஆற்றாது சோர்வடைந்த நளன், தன்னுணர்வை மீண்டும்பெற்று ஒருவாறு தேறிய உள்ளத்தனாய்த் தனதகம் சென்றெய்தி நாட்கள்சில கழிவதன்முன், விதர்ப்பன் அனுப்பிய தூதர்கள் இங்கும் வந்து சேர்ந்தார்.

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார்—போதிற்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயி லகம். 54.

வந்த இத்தூதர் நளனுக்குத் தம் செய்தியைத் தெரிவித்ததை அடுத்தசெய்யுள் தெரிவிக்கின்றது.

காவலன்றன் றூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புத லும்—மாவிற்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து. 55.

பதப்பிரிவு:—காவலன்தன் தூதர் கடை காவலர்க்கு அறிவித்து, ஏவலில் போய் ஈது என்று இயம்புதலும், மாவில் பொலிந்த தேர் பூட்டு என்றான் பூவாளி பாய மெலிந்த தோள் வேந்தன் விரைந்து.

அன்வயம்:—காவலன்தன் தூதர் கடைக்காவலர்க்கு அறிவித்து ஏவலில்போய் ஈது என்று இயம்புதலும், பூவாளிபாய மெலிந்ததோள் வேந்தன் விரைந்து (தன் தேர்ப்பாகனைப் பார்த்து) 'மாவில் பொலிந்த தேர் பூட்டு' என்றான்.

பதவுரை.

காவலன்தன் - விதர்ப்பராஜனுடைய
தூதர் - தூதர்கள்
கடைக் காவலர்க்கு - (நளனது) வாயில்காப்போருக்கு
அறிவித்து - (தாம் வந்திருப்பதை) தெரிவித்து,
ஏவலில் - (அவர்கள்) உத்திரவின்படி
போய் - (உள்ளே) போய், (நளனிடத்தில்)
ஈது - (தாம் வந்த செய்தி) இது
என்று - என்று [பற்றி) சொன்னவுடன்,
இயம்புதலும் - (தமயந்தியின் சுயம்வரத்தைப்
பூ - மலர்களாகிய
வாளி - (மன்மதனுடைய) பாணங்கள்
பாய - பாய்ந்ததால்
மெலிந்த - இளைத்திருக்கின்ற
தோளான் - தோள்களையுடைய நளன்
விரைந்து - பரபரப்புடன் (சாரதியைப் பார்த்து)
"மாவில் - குதிரையிலே
பொலிந்த - பிரகாசம் பொருந்திய
தேர் - தேரை
பூட்டு - பூட்டுவாய்,"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—மெய்தளர்ந்திருந்த நளன் தமயந்திக்குச் சுயம்வரம் என்பதைக்கேட்கப் படபடத்து மிக விரைவில் அங்குச்செல்லவேண்டுமே எனும் அவசரத்தால் வாய்தடுமாறித் 'தேரிலே குதிரையைக் கட்டு' என்பதற்குப் பதிலாகக் 'குதிரையிலே தேரைக் கட்டு' என்று கூறியது இயற்கையாம். நினைவு அயர்ந்து ஒவ்வொருவேளை சொற்களும் செயலும் ஒன்றிற்கொன்று

மாறி நிகழ்வது எல்லோர் அனுபவத்திலும்நேர்ந்திருக்கும். இதனைக் குறிக்க ஆங்கிலத்திலே ஸ்பூனரிஸம் (Spoonarism) என்றொரு வார்த்தை இப்பொழுது புதிதாகவழங்கவந்திருக்கின்றது. இந்தச்சொல்ஸ்பூனர் என்றவொரு ஆங்கிலேய பண்டிதர்தம் செய்கையையொட்டித் தோன்றிற்று. அவர் தம் நினைவை அடிக்கடி மறந்து வேடிக்கைக்கிடமான பற்பல செயல்கள் செய்வதும், முறைபிறழ்ந்து பேசுவதும் வழக்கமாம். ஒருநாள் இவர்வெளியூருக்குப் பயணமானபோதுஇரயில்ஸ்டேஷனுக்கு அவர் மனைவியும் வழியனுப்ப வந்திருந்தாள்.சாமான்களைக் கொண்டுவந்தகூலிக்காரனும் வண்டியினருகில் நின்றுகொண்டிருந்தான். இரயில்புறப்படும்போது நம் ஸ்பூனர், கூலிக்காரனுக்கு முத்தம் கொடுத்துவிட்டு மனைவியின் கையில் கூலிப்பணத்தை வைத்தாராம். அருகிலிருந்தவர் சிரித்தபோதும் அவருக்குத் தன்செய்தி விளங்கவில்லை என்று சொல்வர்.

கெட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் நீள்வரம்பி
லிட்ட பசுங்குவளை யோடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடனாட னூர்க்கு
விரையத்தே ரூரென்றான் வேந்து. 56. [ணைக்
சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றும வீமன் றிருமகளாம்
நல்லுயிரும் வாழு நகர். 57

நளன்புறப்பட்டு விதர்ப்பநாடு நோக்கிப் போவதை இவ்விரு செய்யுள்களும் சொல்கின்றன. இவன் இப்படிப் போய்க்கொண்டிருந்த சமயத்தில், தேவலோகத்தில் நடந்தவொரு நிகழ்ச்சியைப்பற்றிக் கவி பின் கூறுகின்றார்.

நெற்றித் தனிக்க ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவ—னுற்றடைந்தான்
தேனாடுந் தெய்வத் தருவுந் திருமணியும்
வானாடுங் காத்தான் மருங்கு. 58.

பதப்பிரிவு:—நெற்றி தனி கண் நெருப்பை குளிர்விக்கும் கொற்றம் தனி யாழ் குலம் முனிவன் உற்று அடைந்தான் தேன் ஆடும் தெய்வ தருவும் திருமணியும் வான் நாடும் காத்தான் மருங்கு.

அன்வயம்:—பின் இரண்டு அடிகளையும் முதல் வைத்துப் படித்தால் இந்தச் செய்யுளிற்கு அன்வயம் ஆகும்.

பதவுரை.

தேன் - வண்டுகள்
ஆடும் - மொய்த்துப் பறக்கின்ற
தெய்வ - தெய்வத்தன்மை பொருந்திய
தருவும் - ஐந்து விருக்ஷங்களும்,
திரு - இரண்டு நிதிகளும்,
மணியும் - ஒரு மணியும்,
வான் நாடும் - தெய்வலோகமும்,
காத்தான் - ஆள்கின்றவனாகிய இந்திரனுக்கு
மருங்கு - சமீபத்தில்;
நெற்றி - (சிவபிரானது) நெற்றியிலிருக்கிற
தனி - ஒற்றையாகிய
கண் - கண்ணினுடைய
நெருப்பை - நெருப்பையும்
குளிர்விக்கும் - குளிர்வடையும்படி செய்யவல்ல
கொற்றம் - வெற்றி பொருந்திய
தனி - ஒப்பற்ற
யாழ் - வீணையைப் பயிலும்
குலம் - சிறந்த
முனிவன் - நாரத முனிவன்
உற்று - சென்று
அடைந்தான் - சேர்ந்தான்.

விரிவுரை:—நாரதமுனிவனுடைய வீணாகானத்தினதுஇனிமையை இதைவிட நயமாய் உரைத்தவர் யாருமிலர். சிவபிரானது நெற்றிக்கண்ணே முனிவனது யாழின் இசையால் ஆனந்தவெள்ளம் பெருகித் தன்னிடத்துள்ள தீயை அவித்துக்கொள்ளும் என்றால் வேறு கூறுவானேன்.

குறிப்பு:—1. இந்திரன், பஞ்ச தருக்களுக்கும் இரு நிதிகளுக்கும் ஒருமணிக்கும் வானுலகிற்கும்அதிபதி. பஞ்சதருக்களாவன:— சந்தானம் அரிசந்தனம் மந்தாரம் பாரிஜாதம் கற்பகம். இரு நிதிகளாவன:—சங்கநிதி பதுமநிதி. ஒருமணி:—சிந்தாமணி.

2. நாரதருடைய வீணைக்கு மகதி என்று பெயர்.

3. தனி:—இந்தச் சொல்லிற்கு ஒற்றை (solitary) என்றும், ஒப்பற்ற என்றும் (unique) என்றும் இருக்கின்ற இரண்டு பொருள்களும் இந்தச் செய்யுளில் வந்திருக்கின்றன.

4 காத்தான். என்பது இங்கு வினைமுற்று அன்று. இந்தச் செயலைச் செய்தான் என்று அது காட்டவில்லை. செயலைச் செய்தவனைக் காட்டுகிறது. ஆதலால் இந்த இடத்தில் அது வினையால் அணையும் பெயர்.

வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரு மிலராலென் னையுற்று—நாரதனார்
நன்முகமே நோக்கினா னகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து. 59.

வந்த நாரதனைப் பார்த்து இந்திரன், "பூலோகத்திலிருந்து அரசர்களேனும் வீரர்களேனும் யாரும் சில நாட்களாய்எனது சபைக்கு வருகின்றாரில்லையே, இதற்குக்காரணம் யாவதா யிருத்தல்கூடும்" என்று ஐயுற்றான்—என்பது இச்செய்யுளின் கருத்து.

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சுயம்வரத்து—மாமன்னர்
போயினா ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன். 60.

அதற்கு நாரதர், 'தமயந்தியின் சுயம்வரத்திற்கு யாவரும் போவாராகின்றனர். அவளுக்குச் சுயம்வரம் நடக்கின்றதென்றால் உன்னூரை யார் திரும்பிப்பார்ப்பார்" என்று பதில் சொன்னார். சொல்லி, அடுத்த செய்யுளில் தமயந்தியின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றார்.

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு. 61.

பதப்பிரிவு:—அழகு சுமந்து இளைத்த ஆகத்தாள் வண்டு பழகும் கரும் கூந்தல் பாவை மழ களிற்று வீமன் குலத்துக்கு ஓர் மெய் தீபம் மற்று அவளே காமன் திருவுக்கு ஓர் காப்பு.

பதவுரை.

(அந்தத் தமயந்தி)

அழகு - அழகை
சுமந்து - சுமப்பதால்
இளைத்த - மெலிந்துபோன
ஆகத்தாள் - சரீரத்தை யுடையவள்.
வண்டு - வண்டுகள்
பழகும் - நீங்காத
கரும் - கருமையான
கூந்தல் - கூந்தலையுடைய
பாவை - பதுமையைப் போன்றவள்.
மழ - இளமை பொருந்திய
களிற்று - யானைகளையுடைய
வீமன் - பீமராஜனது
குலத்துக்கு - குலத்திற்கு
ஓர் - ஒப்பற்ற
மெய் - மெய்போல் அழிவில்லாத
தீபம் - விளக்குப் போன்றவள்.
மற்று - அதுவன்றி
அவளே - அவள்தான்
காமன் - மன்மதனுடைய
திருவுக்கு - செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும்
ஓர் - ஒரு
காப்பு - காப்பாக இருப்பவள்

என்று நாரதர் இந்திரனுக்குக் கூறினர்.

விரிவுரை:—அழகு பேரழகாதலால் அதை இடைவிடாமல் சுமந்து சுமந்து தேகமும் இளைத்துப் போயினளாம் தமயந்தி. தமயந்தி மெல்லியல் மங்கை என்பது இதன் கருத்து. அவள் மெல்லிய தன்மையுடையவளாவதற்குக் காரணம் அவளது அழகின் மிகுந்த பாரமே என்று கவி சாதுர்யமாய் வர்ணித்திருக்கின்றார். உத்தம மாதருக்குக் கூந்தல் இயற்கையிலேயே மணம் கமழும் என்பது மரபு. ஆதலால் மலர் அணிந்த காலத்தும் அணியாத காலத்தும் வண்டுகள் மொய்க்கப்பெற்ற கூந்தலை யுடையவள். வீமராசன் குலத்தை விளக்கவந்தா ளாதலால் மெய்த்தீபம் ஆயினள். காமன் திருவிற்கு ஓர் காப்பு என்பதின் கருத்துத் தெளிவாக இல்லை. அதற்குப் பலவாறு பொருள் கூறலாம். கற்புப் பிறழாது தம் காதலைத் தாங்குகின்ற மாதர் இவளைப்போன்றவர் இருப்பதால்தான் மன்மதனுடைய ஆட்சி அழியாமல்வளர்கின்றது,எனக்கொள்ளுதல் ஒருவாறு பொருந்தும்.

குறிப்பு:—பாவை, என்பது இங்குப் பாவைபோன்ற தமயந்தியைக் குறித்தலால், அது உவமை யாகுபெயர்.

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்-சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 62.

நாரத முனிவருடைய வார்த்தைகளைக் கேட்ட இந்திரனும் மற்றத் தேவர்களும் தமயந்தியின் சுயம்வர மாலையைத் தாம் பெறுவதற்கு ஆசைப்பட்டுத் தேவலோகத்தை விட்டு விதர்ப்பனுடைய நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயின [தன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் றேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது.

பதப்பிரிவு:—பை தெரியல் வேல் வேந்தன் பாவைபால் போயின தன் சிந்தை கெடுத்து அதனை தேடுவான் முந்தி வருவான்போல் தேர்மேல் வருவானை கண்டார் பெருவானில் தேவர் பெரிது.

அன்வயம்:—பெருவானில் தேவர், பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபால் போயினதன் சிந்தை கெடுத்து அதனைத் தேடுவான் முந்திவருவான்போல் தேர்மேல் வருவானை, பெரிது கண்டார்.

பதவுரை.

பெரு - பெரிய
வானில் - ஆகாயத்திலிருந்து
தேவர் - தேவர்கள்,
பை - பசுமையான
தெரியல் - மாலையைச் சூட்டிய
வேல் - வேலாயுதத்தை ஏந்திய
வேந்தன் - வீமராஜனது
பாவைபால் - பெண்ணினிடத்திலே
போயின - போய்விட்ட
தன் - தன்னுடைய
சிந்தை - நினைவை
கெடுத்து - காணாது
அதனை - அந்த நினைவை
தேடுவான் - தேடும்பொருட்டு
முந்தி - விரைந்து
வருவான்போல் - வருகின்றவனைப்போல்
தேர்மேல் - தேரின்மேல்
வருவானை - வருகின்ற நளனை
பெரிது - நன்றாக
கண்டார் - பார்த்தார்.

விளக்கம்:—கண்டார் (பயனிலை). யார் கண்டார்? தேவர் கண்டார். எப்படிக் கண்டார்? பெரிது கண்டார் - நன்றாகக் கண்டார். எங்கிருந்து கண்டார்? வானில் கண்டார் - ஆகாயத்திலிருந்து கண்டார். எப்படிப்பட்ட வானிலிருந்து? பெரு வானில் - பெரிய ஆகாயத்திலிருந்து. பெரிய வானத்திலிருந்து தேவர் யாரை நன்றாகக் கண்டார்? வருவானைக் கண்டார் - வருகின்றவனைப் பார்த்தார். எதன்மேல் வருவானை? தேர்மேல் வருவானை. எதனைப்போல் வருகின்றவனைக் கண்டார்? வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார் - வருபவனைப்போல் தேர்மேல் வருகின்றவனைக் கண்டனர். எப்படி வருபவனைப்போல்? முந்தி வருவான்போல் - விரைந்து முற்பட்டு வருபவனைப் போல். எதன்பொருட்டு முந்தி வருவான்போல்? தேடுவான் - தேடும்பொருட்டு. எதனைத் தேடுவான்? அதனைத் தேடும் பொருட்டு. ஏன் அதனைத் தேடுவான்? கெடுத்து அதனைத் தேடுவான்-காணாதபடியினால் அதனைத் தேடும் பொருட்டு. எது அது? சிந்தை - நினைவு. யாருடைய சிந்தை? தன் சிந்தை. எந்த சிந்தையது? போயின தன் சிந்தை. எங்குப் போய்விட்டது அது? பாவைபால்-பெண்ணினிடத்தில்.யாருடைய பெண்ணினிடத்தில்? வேந்தன் பாவைபால் - விதர்ப்பனுடைய பெண்ணினிடத்தில்.எதைத்தாங்கிய வேந்தன் அவன்? வேல்வேந்தன் - வேலாயுதத்தைத் தாங்கிய வேந்தன். எதைச் சூட்டியவேல் அது? தெரியல் வேல் - மாலையைச் சூட்டிய வேல். அம்மாலை எப்படிப்பட்டது? பைந் தெரியல் - பசுமையான மாலை.

விரிவுரை:—சுயம்வரத்தைக் கருதிச் செல்கின்ற நளனது தோற்றம் இங்கு மிக்க அழகாக வருணிக்கப்பட்டுளது. அவனது நினைவானது அவனைக் கேட்காமல் முன்னதாகவே ஓடிப்போய்த் தமயந்தியினிடத்தில் தங்கிவிட, அதைக் காணாதவனாகி வழியில் எதையோ தேடிக்கொண்டு போகின்றவனுடைய முகமும் பார்வையும் உடையவனாய்ப் பிரமைபிடித்துச் சென்றான் நளன், என்பது இதன் கருத்து.

வேலாயுதத்திற்கு மாலை சூட்டுகின்ற வழக்கத்தை முதலடி குறிக்கின்றது.

குறிப்பு:—தேடுவான், என்பது, வான் என்னும் முடிவுபெற்ற வினை எச்சம். இங்கு இது வினைமுற்று அன்று.

வருவான், வருவானை:—என மூன்றாவது அடியில் வரும் பதங்கள், வினையாலணையும் பெயர்கள்.

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோ [ன்
ஏவற் றொழிலுக் கிசையென்றா—னேவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து. 64.

இந்திரன் நளனைச் சந்தித்துத் தான் 'சொல்கின்ற காரியத்தைச் செய்' என்றான். நளனும் அது இன்னது என்னதென்று யோசிக்காமல் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான், என்பது இச்செய்யுளின் பொருள். அதன்மேல் இந்திரன் ஏவினதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
யெங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபால்
தூதாக வென்றானத் தோகையைத்தன் னுகத்தால்
கோதாக வென்றானக் கோ. 65.

வேந்தனே, நீ எமக்காகத் தமயந்தியிடம் தூது போய்ச் சுயம்வரமாலையை எங்களுக்குள்ளே ஒருவருக்குச் சூட்டும்படி செய்யவேண்டும் என்றான் இந்திரன். இதைக்கேட்டவுடன், சொன்னதைச் செய்கின்றேன் என்று கொடுத்த வாக்கிற்கும் தமயந்தியின்மீது இருந்த காதலுக்கும் இடையே நளனது மனம் தடுமாறிற்று. எனினும் கடைசியில் வார்த்தையைக் காக்க வேண்டும் என்னும் துணிபே வெற்றிகொள்ளத் தமயந்தியை மெய்ம்மைக்கு முன்னிலையில் ஒரு பயனற்ற பொருளாக விலக்கிவிட்டானேனும் அவன் நெஞ்சு பதைத்ததைக் கவி அடுத்த செய்யுளிற் சொல்லுகின்றார்.

தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவிற்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவி
னிழல்போலுந் தண்குடையா னெஞ்சு. 66.

நூல் பாவில் (Loom), நெய்யும் குழலானது (Shuttle) இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் மாறிமாறி அலைவது போன்று, தாமரை மலரின் நிழல்போலக் குளிர்ந்த குடையையுடைய நளமகாராஜனது மனம், தேவர்கள் விதித்த ஏவலைச் செய்ய நினைக்கும், மறுபடி ஒருதரம் தான் விரும்பும் இளம் கன்னியின் நினைவிற்குத் திரும்பிவரும், என்பது இச்செய்யுளின் கருத்து.

தாமரைப்பூ குளிர்ச்சியானது. நிழலும் குளிர்ச்சியானது. குளிர்ந்த வஸ்துவின் நிழல் பின்னும் குளிர்ச்சியாயிருக்கும் என்பது உண்மையே என்று நாம் முதல்நினைவில் எண்ணி மயங்கும்படி "பூவின் நிழல் போலும் தண் குடை" என இக்கவி நம்மோடு விளையாடுகின்றார்.

ஆவ துரைத்தா யதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரிற்—காவல்
கடக்குமா றென்னென்றான் காமநீ ராழி
அடைக்குமா றுள்ளத் தவன். 67.

பொழிப்புரை:—பிறகு, காமக்கடலை அடக்கவல்ல மனதையுடைய நளன், இந்திரனைப்பார்த்துத் "தேவர்களுக்கு வேந்தனே, நான் செய்யவேண்டியது சொல்லினை. அதற்கு உடன்பட்டேன். ஆனால் தமயந்தியினிடத்தில் சென்று உங்கள் தூதினைச்சொல்ல என்னைக் காவற்காரர்கள்விடமாட்டார்களே.ஆதலால் காவலெல்லாம் கடந்து நான் கன்னிமாடம் போவதெப்படி?" என்று வினவினன்.

விரிவுரை:—ஸத்யசீல னாதலால் நளன், உடன்பட்ட காரியம் இடையூறு இல்லாமல் நிறைவேறுவதற்கு வழி கேட்கின்றான். சிறிதளவு வஞ்சனையுடையவனாயின், இந்தச் சந்தேகத்தைத் தேவேந்திரனிடம் சொல்லாமல், தூதுபோவதும்போல் போய்ப் பிறகு 'கன்னிமாடத்திற்குள்ளே விடமாட்டேனென்று விட்டார்கள்; நானென்ன செய்வேன்' எனத் தன் கடனைக் கழித்துவிடலாம். அவ்வாறு சொல்வானாயின் நளன் காத்தமெய்யானது உயிரில்லா மெய்யாகும்.சொல்லளவில் தேவர்களுக்குக் கொடுத்தவாக்கை அவன் மறுக்கவில்லை யாயினும்,செயல்வகையில் அதுபொய்யேஎன்பதில் ஐயமுளதோ!'மெய்ம்மை நளன்என்பான்' அவ்வாறு போலிவாய்மைக்குத் தன்னை அடிமையாக்கிக் கொள்ளான். இவைகளைஎல்லாம் கருத்திற்கொண்டு தான் போலும் நைடதத்தின்படி இந்திரன்,"செயிராறு தூது நீ செல்லவேண்டும்," என்று கேட்டுக்கொண்டது. செயிர் அறு, என்றால் குற்றமற்ற, அதாவது வஞ்சனையற்ற, என்பது அர்த்தம். "வஞ்சனையில்லாது மனப்பூர்வமாய் நீ தூது போகவேண்டும்," என்று சொல்வதே அவனுடைய மெய்ம்மையை அயிர்த்ததெனும் பழுது தோன்றுமாதலால் புகழேந்தி அவ்விதம் தன் இந்திரனைக் கூறவைக்கவில்லை.

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான்-யாருமுனைக்
காணார்போய் மற்றவளைக் காணென்றான் கார்வண்டின்
பாணாறுந் தாரானைப் பார்த்து. 68.

அதைக்கேட்ட இந்திரன் "உன்னை ஒருவரும் காணாதபடி நீ செல்ல நான் வரம் தருகின்றேன். அதன் உதவியைக்கொண்டு நீ போய்த் தமயந்தியைப் பார்," என்றான்.

பிறர் கண்ணிற்குப்படாமல் சஞ்சாரம் பண்ணக் கூடிய சக்தியைத் தருகின்ற மந்திரத்திற்கு மாலிகாஞ்சன மந்திரம் என்பது பெயர்.

இனி, நளன் புறப்பட்டுக் குண்டினபுரம் போய்ச் சேருகின்றான்.

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[292-வது பக்கத் தொடர்ச்சி]

3. தாற் பருவம்

தகரங் கமழுங் குழன்மடவார்
சலவைக் கலையி னேந்தியன்னை
தளிர்க்கை களிப்ப நெய்யாட்டித்
தளர்வில் களபப் பொடிதிமிர்ந்து
நிகரங் கதலிக் கெனுங்குறங்கி
னிறுத்திப் பசும்பொற் றவிசின்வெண்ணீர்
நிரைவெள் வளைக்கை முகந்தாட்டி
நெடுநீர் சுழற்றிக் கழைபுரைதோள்
மகரம் பொறித்த கலைமுனையால்
மணிமெய் துடைத்துச் சியினாதி
மடியி னிருத்தி யயினிசுற்றி
வளருங் கொழும்பாற் றனமருத்திச்
சிகரம்புரை தொட்டி லின்வளர்த்தச்
சேர்ந்தாய் தாலோ தாலேலோ
செங்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வா தாலோ தாலேலோ. 1.

மறிக்குந் தரங்கப் பெரும்புனலில்
வனசப் பொகுட்டு முனிமுதலாம்
மன்னும் புவனத் தனைத்துயிரும்
மடங்கு மிறுதிக் கொடும்பொழுதிற்
குறிக்குஞ் சமயப் பல்பிணக்கர்
குறும்பு மவர்தங் கடவுளருங்
குறிய சிறிய வயிற்றடங்கக்
குலவுஞ் சுருதி தாலாட்ட
எறிக்கும் பசுங்கேழ் வடத்திலையி
னிருகை மலரி னெடுத்தொருதாள்
இளமெல் விரல்செவ் விதழ்சுவைப்ப
இன்பந் தலைமை சிறப்பமுத்தந்
தெறிக்குங் கடலி லறிதுயில்கூர்
சிறுவா தாலோ தாலேலோ
செங்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வா தாலோ தாலேலோ. 2.

வள்ளக் கமல முறக்குடைந்து
வழிந்த செந்தே னிதழ்குவிந்த
மலர்ச்செங் கமலத் தடம்பொழிதல்
மணிப்பொற் கலசத் துறுநறவைக்
கள்ளக் கடைக்கட் டளிரியலார்
கனிவாய் குவித்துப் பருகலொக்கும்
கடிபைந் தடத்திற் சினைச்சுறவு
ககனத் தெழும்ப அதுதடுப்பான்
பள்ளப் பழனத் துழவரெறி
பகடு தூரக்குங் குறியதிண்கோல்
பழுக்காய்க் கமுகின் குலைசிதறிப்
பலவு தகர்த்துக் கனிகதலித்
தள்ளச் சிறக்கும் வெண்ணெய்நல்லூர்த்
தலைவா தாலோ தாலேலோ
தண்ணங் கமலப் பெண்ணமுதின்
தவமே தாலோ தாலேலோ. 3.

பாணித் தழைத்த மாகதத்தின்
பலகைச் சட்ட மிவைசமைத்துப்
பவளக் கடைகா ஞன்குமொன்றப்
பசும்பொன் ஞணி யிசைத்திறுக்கி
வாணித் திலத்தின் விளிம்புதெற்றி
வயிர மிழைத்துக் கொடுங்கனக
வடங்க ளூற்றிப் பலவிதமார்
வன்னக் கலையின் விதானம்வைத்து
நாணிக் கமல முகிழ்க்குமுக
நற்று யசோதை கைவளர்த்த
நளிர்மெல் லணைசேர் தொட்டின்மிசை
நலஞ்சேர் குழவித் திருவுருவாய்ச்
சேணிற் கலந்த வுருவடக்குந்
தேவா தாலோ தாலேலோ
செங்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வா தாலோ தாலேலோ. 4.

விரிக்கும் பணைப்பஃ றலைமணிகள்
விளக்கிட் டெனத்துன் னிருள்கிழிப்ப
வெண்டோட் டம்போ ருகத்தலரில்
விரைப்பார் படுத்த மெல்லணைமேல்
அரிக்கும் பணிலப் பயோததிதன்
அலையிற் சிதறுங் குறுந்திவலை
அவிழ்பைந் துளவத் திருவுரத்தின்
அணிந்த தரள வடம்புரையத்
தரிக்குங் களப முலைத்திருமான்
றளிர்மெல் வளைக்கை தொடச்சிவந்த
தாட்டா மரைகள் மறைத்தலையிற்
றயங்கப் புவனந் தழைப்பவருள்
தெரிக்கு மியோகத் துயிலமர்ந்த
தேவா தாலோ தாலேலோ
செங்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வா தாலோ தாலேலோ. 5.

வேறு

அருமா மறைதே டுமுதற்பொரு
ளாவாய் நீயேநா
அமுதூ ரநிறை யிரமெய்ப்பெய
ரார்தா ஞேதாதார்
கருமா முகில்மே னிவிழிக்கெதிர்
காணு தார்வீணே
கருவூ டுழல்வா ரகிலத்துயிர்
காய்வா ரோபூமேல்
திருமா மகள்கா முறுபொற்புய
சீராளா வானோர்
சிரமே லொளிர்பா தமலர்ப்பர
தேறுர் போர்சாய
தருமா தியர்நா டுகொடுத்தவ
தாலோ தாலேலோ
தமிழ்தேர் நவநீத புறத்திறை
தாலோ தாலேலோ.

பவமே வலைவா ருதிபுக்கவர்
பார்சேர் நாவாயே
பனகா சனமால் வரையிற்றிகழ்
பாதா வானோறே
யவமே யுழல்வே னையளித்திடு
மாதா ராகாமே
யமரா டியபோ கியிமைப்பிலர்
ஆனோர் போர்சாய

நவமே வருகோ டிமுழுச்சசி
நாணு வாண்மேனி
நகைசேர் வளைவா யின்முழக்கிய
நாதா நாதாநீள்
தவமே புரிகோ சலைபுத்திர
தாலோ தாலேலோ
தமிழ்தேர் நவநீத புரத்திறை
தாலோ தாலேலோ. 7.

வேறு

அருணம ணிக்கதிர் தவழ்நெடு மாடத்
தணுகிக் கதிர்வனமா
அழலென வெருவிப் படிகத லத்தொளி
ரருவிப் புனலெனமோந்
திருணலி வுற்றில திவணென நீலத்
திலகு தலத்தின்மருண்
டெறிகதிர் செறிமர கதமணி நிலவொளி
யிளவறு கெனவார்த்து
மருணடை யிடர்விட விந்தும ணித்தலம்
வழிபழ நீர்பருகி
வடவரை யெனவுயர் கனகத லத்தை
வளைத்திடு மேடைதொறுந்
தருணமி ஞர்பயில் வெண்ணெய்ந கர்க்கிறை
தாலோ தாலேலோ
தங்கச் சலருக மங்கைக் கதிபதி
தாலோ தாலேலோ. 8.

கத்துங் குருகடை கமல வயற்குட்
கடைசியர் களைகடிவார்
களிநறை வெள்ளிக் கலனிற் பருகுதல்
கண்டொரு சினைமந்தி
முத்துந் தியபணி லத்தை யெடுத்து
முதிர்ந்த சுளைப்பலவின்
மூரிக் கனியிடை கீறிப் பொழிதரு
முதுவிரை நறைபருகிக்
கொத்துந் தியமலர் நிமிர்தரு தருநிழல்
குறுகி மயங்கிவிழக்
கொடிபடர் தளவதி சயமிதெ னுவயல்
குறுநகை புரிபொழில்சூழ்
தத்தும் புனல்செறி வெண்ணெய் நகர்க்கிறை
தாலோ தாலேலோ
தங்கச் சலருகமங் கைக்கதிபதி
தாலோ தாலேலோ. 9.

செந்தழல் புகுமன விசயனு முடன்வரத்
தேர்கட விக்கடலுந்
தீவும் பசியபொ னிலமும் பலவுந்
திணியிரு ளொருபுடைசூழ்
அந்த நெடுந்தி கிரிப்பெயர் வரையும்
அகன்று கருங்கிரிமேல்
அஞ்சன முகிலென வளர்தரு பரனை
யடைந்து புகழ்ந்துதரும்
மைந்தர்க ளொருபதின் மரையு முடன்கொடு
வருநெறி பலகடவா
மதின்தொறு மழைதவழ் துவரை புகுந்து
நல்வைதிகன் மகவையெலாந்
தந்தவ ஞசி பெறுங்கரு ணைக்கடல்
தாலோ தாலேலோ
தங்கச் சலருக மங்கைக் கதிபதி
தாலோ தாலேலோ. 10.

தாற்பருவ முற்றிற்று.

வில்லி பாரத விளக்கம்

188964

சபா பருவம்

[294-வது பக்கத் தொடர்ச்சி]

சூதுபோர்ச் சருக்கம்

தமயன் மொழிந்தையும், விதுரன் விடுத்த விடையையுங் கேட்ட வீமன் தரியாது, பொங்கு மனத்தனுய்த் தமயனவனை, யுன்கருத் தென்னென வினவு முன் தன் மனதிடை உலாவு மெண்ணங்களை வெளியிடலானுன். இவனது மெய்யின்வன்மைக்கேற்ப இவனது வாய்வருமொழிகளும் மிகவும் அழுத்தந்திருத்தமாயிருக்குமென முன்னரேயே குறிப்பிட்டுள்ளோம். இவன் மொழிகளில் ஆங்கிலத்தில் சொல்லப்படும் polish என்கிற ஒருவகை நயங் கிடையாது.

அன்று தாழ்புனற் றுறையினிற்
கழுநிரைத் தரியவஞ் சனைசெய்தான்
குன்று போலுயர் வாழ்மனைக்
கொடுந்தழல் கொளுத்திவன் கொலைசூழ்ந்தான்
வென்று சூதினில் யாவையுங்
கவரவே விரகினு லழைத்திட்டா
னென்று தானமக் கன்புடைத்
துணைவனு யிருந்ததவ் விகலோனே.

[முன்னாளில் ஆழ்ந்த கங்கைத்துறையிலே கூரிய இருப்புச்சூலங்களை வரிசையாகவைத்து அருமையான சூதுகளைச் செய்தான்; மலைபோலுயர்ந்த அந்தக் குடியிருக்கும் வீட்டில் கொடிய நெருப்பிட்டுக் கொளுத்தி நம் கொடுங் கொலைத் தொழிலை மேற்கொண்டான்; இப்போதும் நம்மைச் சூதினில் வென்று எல்லாவற்றையும் அபகரிக்கத் தந்திரமாயழைத்திருக்கிறுன்; என்றைக்குத்தான் இந்த எதிரி (இகலோன்) நமக்கு அன்புடைய துணைவனுயிருந்தது?]

வீமன் மனதிற் குடிகொண்ட சினவெள்ளம் பொங்கிப்பெருகுவதை இச்செய்யுள் நன்கு விளக்குகின்றது. கற்றுணர்ந் தடங்கியவர்களுக்கே சினங்காத்தல் அரியதோர் காரியம். அவரைமீறி வார்த்தைகள் வெளி வருவதை நாமனைவரும் கண்டுள்ளோம். வீமனது இயற்கைக்கு அது ஒரு விந்தையன்று. மேலும் தாம் பிழையிழைக்காதிருக்கவுந் தமக்கொருவர் வலிந்து காரணமின்றித் தீங்குசெய்யப் புகுந்தால் அச்செய்கை நீதிக்கு மாறுனதெனத் தோன்றுவதால், அதனல் மனத்திடையெழும் சீற்றம் ஏற்றதென எவருக்குந் தோன்றும். தோன்றவே அம்முனிவை ஆற்றும் வகை வெகுண்டுரைப்பது குற்றமன்றெனு வோர்எண்ணம் மனதிடை எழும்.

இங்கு வீமனுக்கும் அவ்வகை யெண்ணம் மனதில் உதித்தது. தன் னிளமைதொட்டுத் துரியோதன னுள்

ளிட்டா ரனைவரும் தனக்குச் செய்தவைகளெல்லாம் தீங்கே. ஆகவே அச்செயல்களையெல்லாம் தன் அண்ணன் மறந்துவிட்டானனெக்கொண்டு அவனுக் கவைகளை நினைப்பூட்டுகிறான். 'கங்கைக் கரையில் என்னை விளையாடுவதற் கழைத்துப்போய்க் கண்ணிற்படாமல் அந்நதியகத்துக் கூரியஇருப்புக்கழுவை நட்டு என்னையதில் குதிக்கும்படி செய்தனனே! அச்சமயம் கண்ணன் கருவண்டா யவைகளில் மொய்த்திருக்க, ஓடுநீரில், தாமரையில்லாவிடத்தில் வண்டுகள்மொய்ப்பதென்னென அயிர்த்து நான் அவனது சூதைக் கண்டுகொண்டு வேறிடத்திற் குதித்தன்றோ உயிர் பிழைத்தேன்! அவன் செய்த வஞ்சனை யாவருக்குஞ் செய்வதரிதல்லவோ! இளவேந்த னொருவனுக்கே எவருமறியாமல் அவ்வகைச் சூதுகள் செய்யமுடியும். அவ்வஞ்சனையும் சாதாரண மனிதனாற் கண்டுபிடிக்கக்கூடியதன்றே. கடவுளது உதவி யிருந்ததனாலன்றோ நான் அன்று பிழைத்து மீண்டேன்? இவ்வாறு அவன் நமக்கென்றிழைத்த தீது ஒன்றல்லவே. எனக்குச் செய்தது நிற்கட்டும். நம்மவ ரனைவரையும் வேரறுக்க அவன் செய்த இன்னொரு சூழ்ச்சியை மறந்தீரோ? மலைபோலொரு மாளிகையமைத்து, அதை யரக்கினாற் சமைப்பித்து, நாமனைவரும் அயர்ந்து உறங்குகையில் அதை யெரியூட்டப் புரோசனனை ஏவியதை முற்றும் நீர் மறந்துவிட்டீரோ? குடியிருக்கும் வீட்டில் கொள்ளிவைப்பவர் எவ்வகைப்பட்ட வன்னெஞ்சர்? அவர் கொலைபாதகரன்றோ? அவரெண்ணம் நம்மைக் கொன்று தாமே தனியரசு செலுத்தவேண்டுமென்பதை யறியீரோ? இப்போது நம்மை யழைப்பதும் நமக்குக் கெடுதிசெய்யவேண்டுமென்கின்ற எண்ணத்தோடே யன்றோ? இது விளங்கவில்லையா? முன்னர் என்னைக் கொல்ல நினைத்ததும் சூது; பின்னர் அரக்கு மாளிகை செய்வித்ததும் சூது; இச்சமயம் கவறுட அழைப்பதும் சூது! என்றுதான் இந்தச் சகோதரன் நம்முடன் அன்புகொண்டு ஆதரித்தது. அவன் உடன் பிறப்புரிமை பாராட்டத் தக்கவனோ? அவன் பிறந்த நாள்முதல் நமக்குப் பகைவனல்லனோ'' என்று ஆத்திரத்தோடு உரைத்தா னொருபாடல். இவனுரைத்த வார்த்தைகள் சினத்தொடு சொல்லப்பட்டவை யென்பதைக் கவி இச்செய்யுளில் எடுத்துக்காட்டும் வகை நோக்கத்தக்கது. கறுக்கொண் டுரைக்கும் ஒருவன் "கேளுமையா! இவன் இதைச் செய்தான் அதைச் செய்தான்" என்று சொல்வதுபோல் இந்தச் செய்யுளில் ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு வாக்கியமாய் அமைந்துள்ளது;முதன் மூன்றடிகளின்முடிவில் ஒவ்வொரு வினைமுற்றுப் போந்து அவ்வடிகள் முற்றிய தொழிலைக் காட்டி நிற்கின்றன. இறுதி யடியிலும் கோபத்தோடுரைக்கும் முரடரென வீமனும் தலையிலறைந்துகொள்வதுபோல் என்றைக்குத்தான் இவன் நல்லவனுயது, என்றுரைத்தான். சாமானியர், இந்தப் பாவி என்றழைப்பதுபோல் வீமனும் துரியோதனனை 'இவ் விகலோன்' என்றான். வீமனது மொழிகளிலும் உபமானங்களிலும் ஒருவிதக் குற்சை தோன்றும். வளமனையை விவரிக்க வந்த விடத்துக் 'குன்றுபோலுயர் வாழ்மனை' யென்றான். மனையினுயரத்தைச் சொல்லுமிடத்து "வான்தோய்" மனைகளென்றும், 'இரவிதோய் கொடிகொள்மாட' மென்றும், 'வன்கொண்டல் விட்டு மதிமுட்டுவன மாடமென்றும்'' வான்ளாவி நிற்கின்ற சிறப்பையே கவிகள் எடுத்துக்காட்டுவது வழக்கம். ஆனால் அவ்விடத்தில் வீமனது தன்மையை விளக்கவேண்டிக் குன்றுபோன்றகோயிலென்றார் கவி. அரக்கினா லாக்கப்பட்ட மாளிகையாதலால் அரக்கின் செறிவு குன்றுபோன் றிருந்ததெனினும், மாளிகை சித்திரங்க ளிழைக்கப்பெற்றும், வேலைப்பாடுகளமைக்கப்பெற்று மிருப்பதால் அது மிகவும் பொருத்தமான உவமையன்று.

முளையி லேயுயிர் கொல்வதோர் கடுவிட
முற்றிவன் காழேறி
விளையி லேதுசெய் யாதுமற் றவருடன்
விழையுநண் பினிவேண்டா
வளையி லேதமே புரிந்துமேன் மலைந்திடும்
வன்படை கொடிமோதிக்
களையி லேநமக் கிருப்புள தென்றனன்
காற்றருள் கூற்றன்றான்.

[விளையும்போதே உயிரைக் கொல்லும் ஒரு கொடிய விஷமானது (விஷமரமானது) முற்றி வைரம்பாய்ந்து பெருமரமாய் வளர்ந்துவிட்டால் என்னதான் செய்யாது? இனி அவர்களோடு விரும்பிச் செய்யும் நட்பு நமக்கு வேண்டாம்; நாம் தாழ்ந்து ஒழுகுவோமாயின் துன்பமேசெய்து மேலும் மேலும் போர் புரிவான்; வலிமையான படையைக்கொண்டு சண்டைசெய்து வேரறுத்தால்தான் நமக்கு இந்நிலவுலகில் இருப்பது முடியும்—என்று வாயுபயந்த இயமன்போன்ற வீமன் உரைத்தான்.]

இச்செய்யுளில் வீமசேனன் துரியோதனனைக்குறித்தேமொழிகின்றான். முளைக்கும்போதே கொல்லவல்ல ஒரு சிறுமரம் வளர்ந்து முற்றி வைரம் பாய்ந்துவிட்டால் எப்படித் தவறின்றிக் கொல்லுமோ, அதுபோல் மிகச்சிறு வயதுடைபவனு யிருக்கும்போதே நம்மைக் கொன்றொழிக்கப்பலவழியில்முயன்றவன், இப்போது வளர்ந்து, அரசனுய்ப் பலவித அதிகாரங்களைப்பெற்று அரசர் முதலியோர் துணையையும் அடைந்து, கொடுமையிற் கன்றியவனுயிருப்பதால் அவன் தன்னெண்ணத்தை முடித்துக்கொள்ள இன்னது செய்வான் இன்னது செய்யமாட்டான் என்பதில்லை. வரம்பு கடந்து நடப்பான் என்பது திண்ணம். நம்மைக் கூவியழைத்து நாமவனிடம் விருந்தினராய்ச் சென்றிருப்ப, விருந்தினருக்கு யாதோர் துன்பமும் புகாது காக்க வேண்டுமென்கிற மேன்மைக்குணம் அவனிடம் காணுது. அது அநாகரிகக் கூட்டத்தாரிடையும் காணப்படுமேனும் நச்சுமரமாகிய துரியோதனனிடத்து அதனைநாம் எதிர்பார்த்தல் தகுதியன்று. அவனோர்நச்சுமரமாதலால் அவனை நச்சுதல் (விழைதல்) நமக்கேற்காது. அவனை யணுகினாலும் நமக்குத் தீமையே உண்டாகும். நாம் தாழ்ந்து போகிறோம் என்று கண்டால், அவனிடத்து நமக்குள்ள அச்சத்தால் வணங்குகிறோம் என்றெண்ணி, மேலும்மேலு மவன் உடற்றுவான். படைகொண்டு நம்மிடம் போரும் புரிவான். நாம் படையையும் ஆயுதங்களையும் கொண்டு சென்று தாக்கினாற்றான் நாமிவ்வுலகத்தில் இருக்கலாம். இது எனக்குத் தெரிந்தது.''

இவ்வாறு தன் வலிவுக்கு ஏற்ப வீமனும் மொழிந்தான். இடுக்கணுற்றகாலை யென்ன செய்வதென நாம் சிலரை வினவில், அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறெலாம் புகலுவர். அதிகத் தெய்வபக்தி யுடையவர் குறிப்பிட்டதெய்வங்களுக்குப் பிரார்த்தனைகள்செய்ய

வேண்டு மென்பர்; மாந்திரீக மறிந்தவர்கள் மந்திரஞ் செய்யவேண்டு மென்பர்; சோதிடம் வல்லார் உற்பாத சாந்திகளைச் செய்யவேண்டு மென்பர்; நீதிநூலுணர்ந்தோர் பலவகைச் சூழ்ச்சிகளைச் செய்யவேண்டு மென்பர்; மொய்ம்புடைய மாந்தர் இடுக்கண் விளைப்பவரை நையப் புடைத்தலே தலைசான்றதென்பர். வீமனும் "துரியோதனன் விரகை விரகினாற் களைவதென்பது இயலாது. அதற்கு நீர் ஏற்றவரல்லர்; ஆகையால் தண்டங்கொடு புடைப்பீராயின் இன்றேவருந்துன்பம்நன்றாய்விடும்'' என்றான்.

வீமனது உவமானத்தைச் சற்றே ஆராய்வோம். முளையிற் கொல்லும் விடம் விளையில் ஏது செய்யும்? கொல்வதை விட வேறேதாவது செய்ய முடியுமோ? சிங்கி குளிர்ந்துங் கொல்லுமென்பாரே யன்றி வளர்ந்துங் கொல்லுமென்பா ருளரோ? விடமென்பது வளர்ந்து முற்றுமோ? ஆகவே விடமென்பதைத் துரியோதனனோடுஐக்கியப்படுத்தினாலன்றி இச்செய்யுளிற்குப் பொருள் காண்பதரிது. இரண்டாமடியில் 'அவருடன் விழையுநண்பினிவேண்டா'வெனத்துரியோதனனையும் கடுவிடத்தையும் மறந்து அவனது தம்பியர் சுற்றத்தாரனைவரையுங் கூட்டி யுரைத்தான். மீண்டும் மூன்றுமடியில் 'ஏதம்புரிந்து மலைந்திடும்' என்னுமிடத்தில் தம்பிமாரையும் மற்றவரையும் மறந்து சுயோதனனையே குறிப்பிட்டான். இன்றேல் 'மலைந்திடும்' என்னும் செய்யுமென் முற்று, பல்லோர் படர்க்கையாகிய 'அவரை'க் குறிப்பிட்டுப்பிழைபாடுறும். உயிர்கொல்வதோர் கடுவிடம் என்பானேன்? உயிரைக் கொல்லாது உடம்பைக் கொல்லும் விடமு முண்டோ வுலகில்? முளையிலே என்னும் வழக்கச்சொல்லும், களையிலே என்னுமிடத்தில் களைந்தாற்றான் என்று பொருள்படப் பிரயோகித்திருப்பதுவும்,இன்னும்இவைபோன்றபிறவும் வீமனது தன்மையை விளக்கக் கையாளப்பட்டவை.

தேற லார்தமைத் தேறலுந் தேறினர்த்
தேறலா மையுமென்று
மாற லாருடன் மலைதலு மாலுடன்
மருவிவாழ் தலுமுன்னே
யாற லாதன வரசருக் கென்றுகொண்
டரசநீதியிற் சொன்னார்
கூற லாதன சொல்வதென் செல்வதென்
கொடியவ னருகென்றான்.

[பழகிப் பரிசோதித்து இவர் நமக்குவேண்டாமெனத்தள்ளிவிட்டவரைப் பின்னால் சிறந்தவரெனத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதலும், அவ்வாறே தேர்ந்தெடுத்தவரைப் பின்னர்த் தள்ளிவிடுதலும், எப்போதும் நம்மிடம் பகைமை பூணுதவரிடம் போர் புரிதலும், மாறுபட்டவருடன் சேர்ந்து வாழமுயலுதலும், அரசருக்கு முறைமையில்லாத காரியங்கள் என்று அரச நீதிநூற்களில் நூலாசிரியரான சான்றோர் மொழிந்திருக்கின்றனர். அங்ஙனமிருக்க, சொல்லப்படாதவைகளைச் சொல்வதென்? அக்கொடியவன் அருகில் போவதென்? என்று அருச்சுனன் சொன்னான்.]

இது அருச்சுனன்கூற்றென்பது இதற் கடுத்தசெய்யுளில் "விசயனிவ்வகை மொழிந்ததும்'', என்பதால் விளங்கும். அருச்சுனன் கருத்தின்னதெனக் கண்டுகொள்வது சற்றே கடினமாயிருக்கும். சொல்லக்கூடாதனவற்றைச் சொல்வது என் என்று அவன் கூறியது வில்லிபாரதத்தில் 'விதியினை யாவரே யெதிர் வெல்வார்' என்று முன்னர்த் தருமர் கூறியதைக் குறிக்கும். அன்றி, வீமன் வார்த்தையாகிய களையிலே நமக்கிருப்பென்னும் முன்செய் யுளீற்றடியைக் குறிக்கும். இவ்விரண்டு சந்தர்ப்பத்திலும் பொருள் கூற இயலுமேனும் அவ்வாறுரைப்பதுவலிந்துரைப்பதாகும். மேலும் அவை சரிவரப் பொருந்தா. இவ்வமயத்தில் வடமொழிப் பாரதத்தில் என்னகூறியிருக்கின்றதென ஆராயுங்கால்அங்கே, தருமர் விதுரனை "உன் மனதிலுற்றதை யுரை''யென்றபின்னர், "அவனும் உனக்கு எது ஏற்றதோ" அதைச்செய் யென்கிறான். பின்னர், தருமர்திருதராஷ்டிர மஹாராஜன் புத்திரர்களைத் தவிர வேறு ஆடத்தக்க சூதர் யாரிருக்கிறார்கள்?............அவர்களுடன் சேர்ந்து நான் பலமுறை ஆடவேண்டியிருக்கும்'' என்று கேட்க விதுரனும், விவிம்சதி, சித்திரசேனன், முதலிய பல அரசர்கள் பெயரைச் சொல்லி இவர்களில் யாவரினும் விஞ்சியவன் சகுனிதா னென்கின்றான். அதற்குத் தருமர் சொல்லுவதாவது. "மிக்க பயங்காரர்களும் மோசமே உபாயமாக வுடையவர்களுமான சூதர்கள் அந்தச் சபையில் ஆடுவதற்கு உட்கார்ந்திருக்கின்றனர். பிரம்மதேவரால் இவ்வுலகமனைத்தும் விதியின்வசத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. ஒன்றும் சுதந்தரமாயில்லை.......திருதராஷ்டிர மஹாராஜா கட்டளையிட்ட பிறகு நான் சூதாட்டத்திற்குப் போக விரும்பாமலிருக்கவில்லை. புத்திரனுக்குப் பிதாவின்மேல் பற்று எப்போதும் உள்ளதுதானே. ......செயிக்குந் திறமையுள்ள சகுனி அந்தச்சபையில் என்னை அழைக்காம லிருப்பானுயின் விருப்பமில்லாத நான் அவனுடன் ஆடப்போவதில்லை. அழைத்த பிறகு ஒருபோதும் திரும்பேன்; இது நான் நெடுநாளாக வைத்துக்கொண்ட விரதம்''—வடமொழிப் பாரதத்துள்ள இம்மொழிகளை மனதிற் கொண்டிருந்த வில்லி, சுருங்கச் சொல்லிப்போகும் தன் பாரதத்திலும் அம்மொழியினை நோக்கி அருச்சுனன் விடையினையும் அமைத்துள்ளார் என்பது எமது துணிவு. ஆகவே ஈற்றடி, தருமர் சூதாட்டத்திற்குப் போக விரும்பியதையும், அங்கு ஆடுவேனெனக் குறிப்பிட்டதையும் சுட்டிக்காட்டும். சொல்லத் தகாதனவற்றைச் சொல்வதென்? அங்குச் செல்வதென்? ஒரு சமயம் தருமபுத்திரனது மனதிடை அந்தரங்கத்தில்ஆடவேணுமென்கிறஆசையிருந்ததோ?

ஒருவனது குணங்களைப் பரிசோதித்தறியாமல் அவனிடம் நம்பிக்கை வைத்துப் பழகுதலும், அவ்வாறு பலவகையிலும் பரிசோதித்தறிந்து ஒருவனை உற்றானெனத் தேர்ந்தெடுத்தபின், அவனிடம் ஐயங்கொள்ளுதலும் வள்ளுவருரைப்பதுபோல் தீரா இடும்பை தரும். முன்னவனுக்குத் தீங்கு செய்ய அதிகாரம் கொடுத்ததாகும்; பின்னவனுக்கு, இத்தன்மைத்தனோ இவன்! இவனிடம்இனியிருப்பது தகாதெனத்தோன்றச் செய்யும். அதனால் அவன் நீங்குவன். நட்பாளருடன் பகைகொண்டு பொருதல் உன்மத்தன் செயல். அவ்வாறே மாறுபட்டவருடன் மருவி வாழ்தலும் பித்தர் செயலாம். வீமன் சொன்னது உண்மையாதலால் நாம் இளமைப்பருவந்தொட்டுப் பழகி இவராகாதவர் என்று கண்டவரிடம் போதல் அழகோ? சென்றபின் சூதாடல் அடுக்குமோ? நமக்கு மாறானவருடன் மருவி வாழ விரும்புதல் என்ன ஏழ்மைத்தனம்? நீ செய்ய நினைப்பது நெறியில்லாதன செய்தலாகும். ஆகவே சொல்லத் தகாதனவற்றை யறிஞரே, சொல்வதென்'' என்றான் கிரீடி.

தேறினர்த் தேறலாமை யென்பதை விதுரனுக்காக்கி, 'அவ்விதுரன்நமக்குற்றவன்; அவன் குறிப்பினின்றும் அவ்விடம் செல்வது தகாதென் றேற்படுகிறது. அங்ஙனமே அவன் சொல்லும் குறிப்பை மீறிச் செல்வேன், ஆடுவேன் என்பதென்ன அறிவு? என்றுரைத்ததாகக் கொள்ளலாம். கூறலாதன சொல்வதென் என்பது வீமனுரைகளுக்காக்கி நம்மொடு தற்போது மாறுபடாதிருக்கும் துரியோதனுதியரைப் படைகொண்டு மோதுதல் பிழை; அவ்விடம் செல்வதே ஏற்றதன்று, என்று கூறியதெனவும் கொள்ளலாம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[286-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—8-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

அணைவ தரவணைமேற் பூம்பாவை யாகம்
புணர்வ திருவரவர் முதலுந் தானே
யிணைவனு மெப்பொருட்கும் வீடு முதலாம்
புணைவன் பிறவிக்கடல் நீந்து வார்க்கே.

அவதாரிகை:—கீழ்த்திருவாய்மொழியில்12-ம்பாட்டில் "தாமோதரனைத் தனிமுதல்வனை ஞால முண்டவனை" என்றபடியால் ஜகத்துக்கெல்லாம் ஒரேரக்ஷகனென்றும்,யுகப்பிரளயத்தில் அவன் ஒருவனே அவைகள் எல்லாவற்றையும் தன் வயிற்றில் வைத்துக் காப்பாற்றுகிறவனென்றும் சொல்லியாய்விட்டது. இக்காரணங்களன்றி இந்தப்பத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் சிற்சில வேறு ஹேதுக்களைக்கூறிப் பகவானது சர்வேசுவரத்தை ஸ்தாபிக்கிறார். மேலும் சென்ற தசகத்தின் பலசுருதியில் அத்தசகத்தின் 12வதுபாட்டும் அண்ணல் தாள் அணைவிக்கும் என்றபடியால் ஜன்மங்கள் எடுக்கின்ற சம்சாரமாகிற நிர்ப்பந்தத்தினின்றும் விடுவிக்குமென்றார். மோக்ஷ ரூபமான வைகுண்டம் சுகமாக விருக்குமோ, அவ்விடத்தில் ஜனன மரணம் அடிமைத் தன்மை முதலான ஹேதுக்கள் சுகாநுபவத்தைக் கொடுக்குமோ, என்ற சங்கையைநீக்கி, இத்தசகத்தில் அம்மோக்ஷம் அதிரஸாவஹமென்றும் "அந்தமில்" அதாவது எல்லையில்லாத ஆனந்த ஸ்வரூபமென்றும், இத்தசகத்தின் இறுதியில், மஹத்தான பேரின்பமாகிய "எம்மா வீட்டை" "ஆள்வர்" அதாவது சுயேச்சையாய் யாதொரு தடையுமின்றிப் பக்தர்கள் அநுபவிப்பரென்றும் எடுத்துக் கூறுவதால்பரிஹரிக்கிறார் - ஆகையால் சர்வேசுரவனுனபடியாலும் மோக்ஷத்தில் அதிமனோஹரமான ரஸவஸ்துவானபடியாலும் எல்லா ஜனங்களும் அவனை ஆசிரயக்கிறதே நலமென்று உலகத்தாருக்குக் கற்பிக்கிறார்.

உரை:—ஆதிசேஷன்மேல் கண்வளருவது சுந்தரமான ஸ்திரீ (அதாவது இலக்குமியின்) (ஆகம்) திருமேனியைப் புணர்வது. இருவரவர் - அவரிருவர் என்று மாறி அந்வயிக்க. பிரசித்தமான பிரம்மருத்திரர்களுக்கு முதலும் - காரணமும் ஆம்-எல்லாப்பொருள்களுக்கும் அதாவது தேவமனுஷ்யாதி ஸகல பதார்த்தங்களுக்கும் இணையவனும் - சமமாய் நின்று தேவமனுஷ்யனாக அவதரிக்குமவன்; வீடுமுதலாம் - வீடு அதாவது மோக்ஷத்திற்கு முக்கிய காரணம். பிறவிக்கடல் நீந்துவார்க்கு - பெரிய கடல்போன்று மாறிமாறி எடுக்கும்பற்பல பிறவிகளைத்தாண்டுவதற்கு. புணைவன் -தெப்பம்போல் மோக்கமாகிற அக்கரைக்கு உய்த்துப் போகிறவன்.

2-ம் பாசுரம்.

நீந்துந் துயர்ப்பிறவி யுட்படமற் றெவ்வெவையு
நீந்துந் துயரில்லா வீடு முதலாம்
பூந்தண் புனற்பொய்கை யானை யிடர்கடிந்த
பூந்தண்டுழா யென்றனி நாயகன் புணர்ப்பே.

பொழிப்புரை:—புஷ்பித்து, சீதளமான ஜலத்தையுடைத்தான மடுவில் யானையின் (கஜேந்திராழ்வான்) துக்கத்தைப்போக்கிய சீதளமான துளசியைத் தரிக்கும் என்னுடைய ஸ்வாமியினுடைய ஸம்பந்தமே இஜ்ஜன்ம முதலிய நாநாவிதங்களான துக்கங்களில்லாத மோக்ஷத்திற்குக் காரணமாகும்.

குறிப்பு:—1 நீந்தும் - நீந்திக்கொண்டே இருக்கிற, இன்னமும் நீந்தி முடியவில்லை என்று கருத்து - நீந்தவும் முடியாதென்று ஊஹம். 2 மற்றெவ்வெவையும் - ஜனன மரணம்,மூப்பு, பசிதுன்பம் முதலாயின. 3. நீந்தும் துயரில்லா வீடு-இவ்வீடு அதாவது மோக்ஷகதிக்கு ஏகுங்கால் வழியில் கிடப்பதில்லை என்பது தாத்பரியம்.

4 கஜேந்திராழ்வானுக்கு மோக்ஷம் கிடைத்தது ஆர்த்ததெசையில் பகவானைச் சரணாகதி அடைந்த நிமித்தமென்று கருத்து.

3-ம் பாசுரம்.

புணர்க்கு மயனு மழிக்கு மரனும்
புணர்த்த தன்னுந்தியோ டகத்து மன்னிப்
புணர்த்த திருவாகித் தன்மார்விற் றான்சேர்
புணர்ப்பன் பெரும்புணர்ப் பெங்கும் புலனே.

பொழிப்புரை:—ஜகத்தைச் சிருஷ்டிக்கும் பிரம்மாவுக்குத் தன் னுந்தியை யாசிரயமாகக் கொடுத்துவைக்கும். ஜகத்தைஅழிக்கும் அதிகாரியானருத்திருக்கும் தன்திருவுடம்பை ஆசிரயமாகக் கொடுத்து வைக்கும்-ஸர்வலோகேசுவரியான இலக்குமிக்குத் தன் மார்பைக் கொடுத்து வைக்கும்; திருவநந்தாழ்வான்மேல் கண் வளரும். இவ்விதமான ஜகத்துக்கு ஈசுவரன் ஒருவன் என்றே அறிகுறியாய் நிற்கும் வியாபாரங்கள் எங்கும் கண்டறியலாம்—அதாவது காணக்கிடக்கின்றன.

குறிப்பு:—"புணர்" என்ற பதம் 1 சிருஷ்டி, 2 தேஹத்தால் சேர்க்கை, 3 புணர்ப்பு - காரணத்தால் உண்டாகும் காரியம்.

4-ம் பாசுரம்.

புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி
நலமந்த மில்லதோர் நாடு புகுவீ
ரலமந்து வீய வசுரரைச் செற்றான்
பலமுந்து சீரிற் படிமி னோவாதே.

குறிப்பு:—நாம் இந்தத் தசகத்தின் அவதாரிகையில் குறித்தபடி—ஆழ்வாரின் நோக்கம் உலகத்தாருக்கு உபதேசம் செய்வதென்பது இப்பாட்டால் வெளிப்படுகிறது.

குறிப்பு:—முந்து பல—பகவானை ஆச்ரயிக்கையில் அங்ஙனம் தொண்டு செய்யும் பயன், சுகரூபமாய்த் துவக்கத்திலேயே கைக்கு வருகின்றதென்பது தாத்பரியம்—பல தெசைவரையில் காக்கவேண்டா.

பொழிப்புரை :—ஐம்புலன்களால் அநுபவிக்கும் விஷயசுகங்கள் விட்டுவிட, கரைகாணாத ஆநந்தத்தை ஸ்ரீ வைகுண்டம் போய்ப் பிரவேசிக்க இச்சையுடையவர்களே-பக்தி செய்யத் தொடங்குவது, முதல்சுகரூபமாயிருக்கும் பகவானது கல்யாண குணங்களின் அநுபவத்தை இடைவிடாதுபடியுங்கோள். அசுரர்கள் வியாகுலப்பட்டு நசிக்கும்படி அவர்களைக் கொன்றவன் உங்களுடைய ஐம்புலன்களின் கொடுமைகளி லிருந்தும் நிவர்த்திப்பான்.

5-ம் பாசுரம்.

ஓவாத் துயர்ப்பிற யுட்படமற் றெவ்வெவையும்
மூவாத் தனிமுதலாய் மூவுலகும் காவலோன்
மாவாகி யாமையாய் மீனாகி மானிடமாந்
தேவாதி தேவ பெருமானென் றீர்த்தனே.

அவதாரிகை:—பகவான் ஸர்வேசுவரன் என்கிற சின்னங்கள் எங்கும் காணக்கிடக்கின்றன என்று முன்பாசுரத்தில் அருளிச்செய்தார். அக்குறிகளின்சிலவற்றை இப்பாட்டி லெடுத்துக்கூறுகிறார்.

பொழிப்புரை:—ஒருபொழுதும் ஓய்வென்பதில்லாமல் பிராணிகளை வதைக்கும் ஜன்மமுள்பட ஜரை பசி துன்பம்மூப்புமுதலாயநாநாவிதமானபாதைகள் அவர்களை எல்லாக் காலத்தும் வருத்தாதே, அவற்றிற்குப் புருஷார்த்தங்கள் கிட்டவேண்டுமென்று அடிக்கடி ஒருபிறப்புஒய்ந்ததும் மற்றொருபிறப்புச் சங்கல்பித்து அதனில் கர்ணகளேபரங்களின் உதவியால் தன்னைக் குறித்துத் தவம்செய்து உய்யுமாறு அவர்களுக்குஜன்ம சிருஷ்டி ஓயாமல் செய்து திரிலோகங்களையும் உதவி புரிந்தருளுகிறான்; பரமதயவாலே மனுஷன் தேவதையாக அவதாரம் எடுத்து அவர்களுக்கும் உபகரிக்கும் வேளையில் தனக்கு அந்த அவதாரங்களில் தோஷம் தட்டாமல் கர்மநிபந்தனைக்கு அகப்படாமல் பூர்ணமான கல்யாண குணங்களோடு தேவமனுஷ்யாதி வியாபாரங்களை அநுசரிக்கிறான். இவனே அயர்வறும மரர்களுக்கு அதிபதியானவன்.

குறிப்பு:—"காவலோன்"-ரக்ஷகன்-அதாவதுஎந்தக் கெடுதலும் நேரிடாதே காத்து ரக்ஷிப்பவன். அவன் பரம தயாளுவானதால் ஆத்மாக்களை அடிக்கடி ஜன்மம் எடுக்கச்செய்வது அவர்களதுசீர் திருத்தத்தின் பொருட்டேயாம்என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். இவனே தான் ஹயக்கிரவனாகவும் கூர்மாவதாரமாகவும் மத்ஸ்யாவதாரமாகவும் இந்தப் பூமியை உத்தரித்தவனான மஹாபுண்ணியவான்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[295-வது பக்கத் தொடர்ச்சி]

4. சப்தப் பிரமாணம்.

(iii) பதம்:-பதமென்பது வாக்கியப் பகுதியாகும். அவ்வந்தப் பொருளுணர்ச்சிவிருப்பால் பதங்களை உச்சரித்தல் தாற்பரியமாகும். தாற்பரியம் (Context) வாக்கியப் பொருளுணர்ச்சிக்குச் சககாரி யாகும். இதுவும் முன்னே கூறிய, அவாய்நிலை யோக்கியதை அண்மை எனும் மூவகையும் சககாரி யெனப்படும். எனவே பதத்தின்பொருள் அவாய்நிலை யோக்கியதை அண்மை என்பனவற்றோடு அந்தச்சந்தர்ப்ப தாற்பரிய உச்சரிப்புக்குத் தக்கவாறு பொருளையுணர்த்தும். பதத்திற்கும் அர்த்தத்திற்கும் உள்ள சம்பந்தத்தைச் சக்தி என்பர் தர்க்க நூலார். பதத்திற்கும் அர்த்தத்திற்கும் உள்ள சம்பந்தமாகிய ஞானம் எவனுக்குண்டாகிறதோ, அவனுக்கே பதத்தின்ஞானத்தால் பதார்த்தஸ்மிருதி(Memory) உண்டாகும்.

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாலுனை நாளுந் தொழுவனே

தனிக்குறுந்தொகை 2.

ஞானம் எவனுக்கில்லையோ அவனுக்குப் பதார்த்தஸ்மிருதியுண்டாகமாட்டது. ஆதலால் விருத்தி(சக்தி) யோடு கூடிய பதத்தின் ஞானம் பதார்த்தத்தின் ஸ்மிருதிக்குக் காரணமாம். ஒவ்வொரு பதமும் சக்தி பெற்றது. அது அன்வயத்தில் வேறு சக்தியாகவும் மாறும். சக்தியாவது இப்பதம் இப்பொருளை யுணர்த்தவேண்டுமென்னும் இறைவன் இச்சை, சீவர்களால் வெளியாவது. எனவே, பதமாவது சக்தி பெற்ற [illegible] லாகும்.

(iv) பதமும், பொருளும்

பதம், முக்கியம் கௌணம் என இருவகைத்து. எப்பதம் எப்பொருளைச் சக்திவிருத்தியால் உணர்த்துகின்றதோ † அப்பதம் அப்பொருளில் முக்கியமாகும். பசு வென்னும் பொருளை உணர்த்துவதற்குப் பசு வென்னும் பதம் 'முக்கியம். கங்கையி லிடைச்சேரி' யென்புழி, கங்கையென்பது கரையை யுணர்த்தலால், இந்தப் பதம் இலட்சணா விருத்தியால் உணர்த்தும் கௌணம் எனப்படும். லட்சணா விருத்தியாவது-சக்தி விருத்தியா லறியப்படும் பதப்பொருளின் சம்பந்தம். லட்சணா விருத்தியி லறியப்படும் பொருளை லட்சியமென்றுகூறுவார். இவற்றின் அமைதியை அப்பரும்,

உட்டங்கு சிந்தை வைத்தார்
உள்குவார்க் குள்ளம் வைத்தார்
விட்டங்கு வேள்வி வைத்தார்
வெந்துயர் தீர வைத்தார்
நட்டங்கு நடமும் வைத்தார்
ஞாலமு நவில வைத்தார்
கட்டங்கு தோண்மேல் வைத்தார்
கழிப்பாலை சேர்ப்ப னாரே.

திருக்கழிப்பாலை - திருநேரிசை 6.

என்றனர்.

மேற்கூறிய சக்திவிருத்தி, இலட்சணாவிருத்தியென்

† இதைச் சக்கிய மென்பர்—(உ - ம்)
காருடை கொன்றைமாலை கதிர்மதி யாவி னோடும்
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யுள்ளார்
பாரொடு மண்ணும் விண்ணும் பதினெட்டு கணங்க ளேத்த
சீரொடு பாட லானார் திருச்செம்பொன் பள்ளி யாரே.
திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை.

னும் இருவகை * விருத்திகளையுங் கிரகித்தற்கு ஏதுக்கள்பல உள. அவற்றைச் சற்று இங்குத் தேவரா வாயிலாய் ஆராய்வோம்:—

பதத்தின் சக்திவிருத்தியைக் கிரகித்தற் கேது எண் வகையாகும். அவையாவன:—(1) வியவகாரம் (2) உபதேசம் (3) உவமானம் (4) கோசம் (5) வியாகரணம் (6) விவரணம் (7) சந்நிதானம் (8) வாக்கிய சேஷம் என்பன.

(1) வியவகாரம் என்பது வெள்ளிடையில் நடவடிக்கை. "பானையைக் கொண்டுவா" என்றொருவனேவ, மற்றொருவன் பானையைக் கொண்டுவருதலைப் பார்த்த பாலன் "ஓ ஓ பானையைக் கொண்டுவா" என்று அவன் கூறியதால் இவன் காணப்படும் பானையான பொருளைக் கொண்டுவந்தானன்றோ, எனப் பாலன் எண்ணுகிறான். இச் சந்தர்ப்பமாகியதே வியவகார ஏதுவாய்ப் பதசக்தியைக் கிரகிக்கச் செய்யும். அதிதீவரமுடைய ஞானிக்கு ஒரு பதமே பல விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கும். இதை அப்பர் திருவாக்கால் காண்க:—

மாற்றமொன் றருள கில்லீர் மதியிலேன் விதியி லாமை
சீற்றமும் தீர்த்தல் செய்யீர் சிக்கன வுடைய ராகிக்
கூற்றம்போ லைவர் வந்து குலைத்திட்டுக் கோகு செய்ய
ஆற்றவுங் கில்லே னையே னாரூர்மூ லட்ட னீரே.

திருவாரூர் - திருநேரிசை 6.

(2) உபதேசம். இது ஆப்த வாக்கியமென முன்னே கூறப்பட்டது. உலகச் செய்கையில் தாய் தந்தையர் குழந்தைகளுக்குக் கண்முதலிய உறுப்புக்களைக்காட்டி. இது கண், இது மூக்கு என அப்பதங்களால் அவ்வப் பொருள்களைத் தெரிவித்தல் போல்வதும் பிறவும் உபதேசமாகும்:—

வெண்டலை மாலையுங் கங்கை
கரோடி விரிசடைமேற்
பெண்டணி நாயகன் பேயுகந்
தாடும் பெருந்தகையான்
கண்டணி நெற்றியன் காலனைக்
காய்ந்து கடலின்விடம்
உண்டருள் செய்தபி ரான்கட
வூருறை யுத்தமனே.

திருக்கடவூர் - திருவிருத்தம் 8.

என்னும் இந்தப்பாசுரம் ஆப்தவாக்கியத் தொடர்மொழியாம்.

(3) உவமானம்- அதாவது ஒப்புமை யுணர்வு. இதை உவமானப் பிரமாணத்திற் கண்டோம். ஆவினை யொக்கும் ஆமா என்னும் அதிதேச வாக்கியப் பொருள் நினைவோடு கூடி ஆவையொத்த பிண்டத்தைக் கண்டவிடத்து ஆமா வென்னும் பதத்திற்கு ஆமா வடிவ பிண்டத்தில் சக்தி கிரகிக்கப்படுகின்றது. ஒப்புமையுணர்வால் இஃது ஆமா என ஆமா என்னும் பதத்திற்கு ஆமாப் பொருளில் சக்தி கிரகிக்கப் படுகின்றமை காண்க.

விட்டுருவம் கிளர்கின்ற சோதி யானும்
விண்ணவர்க்கு மறியாத சூழ லானும்
பட்டுருவ மால்யானைத் தோல்கீண் டானும்
பலபலவும் பாணி பயின்றான் தானும்
எட்டுருவ மூர்த்தியாம் எண்தோ ளானும்
என்னுச்சி மேலானு மெம்பி ரானும்
கட்டுருவம் கடியானைக் காய்ந்தா னாகும்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே.

திருக்கருகாவூர் - திருத்தாண்டகம். 9.

தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலம் அமுதாக வுண்டார் போலு
மடியார்கட் காரமிர்த மானார் போலும்
காலனையுஞ் சாய்த்த கழலார் போலும்
கயிலாயம் தம்மிடமாய்க் கொண்டார் போலும்
ஏலங்கமழ் குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய வீச னாரே.

திருவிடைமருது - திருத்தாண்டகம் 8.

* பொருத்திய குரம்பை தன்னைப்
பொருளெனக் கருத வேண்டா
விருந்தியெப் போது நெஞ்சு
ளிறைவனை யேத்து மின்க
ளொருத்தியைப் பாகம் வைத்தங்
கொருத்தியைச் சடையுள் வைத்த
துருத்தியஞ் சுடரி னானைத்
தொண்டனேன் கண்ட வாறே.

திருத்துருத்தி - திருநேரிசை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரை.

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டீ.டீ.டி. மெடிகேடட் டப்பி

பிராஞ்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

கலாநிலயச் சொல்லூ டாட்டம். 1.

இடம்—வலம்

1. இந்திரன்
4. காட்டுப் பசு
7. கிளி
8. கிடதநாட்டுத் தலைநகர்
10. இராவணனுடைய சேனாதிபதி
12. இலக்குமி
13. ஒன்றியாயிருத்தல்
15. வேதம்
16. பட்டினம்
18. வலிமை
19. பூச்சிறு லாடை
20. நான்கு யுகங்களி லொன்று
22. சிவஞான சித்தியாரில் ஓர் அத்தியாயம்
23. சமுத்திரம்
24. மரத்திலிருந்து அறுத்தது
25. எருமை
26. உண்
27. மயக்கங்கொள்
28. உடலின் உள்ளுறுப்பு

1	2	3		■	4	5	■	6
7			■	8			9	
10			11		■	12		■
	■	■	13		14	■	15	
■	16	17		■	18			■
19			■	20		■	■	21
22					■	23		
24			■	25			■	
26		■	27		■	28		

மேல்—கீழ்

1. தேவாரம் பாடியவர்களில் ஒருவர்
2. அம்பு
3. வாசனை
4. உயிர்
5. குடித்து
6. அழகிய
8. துர்க்கை
9. பாண்டவர்களில் ஒருவன்
11. பெண்கள்
14. சீதை
16. சினேகமல்லாதவன்
17. கொன்றை
19. பரமசிவன்
20. ஆட்டுமயிரில் நெய்தது
21. கைப்போர் வல்லவர்
23. ஓர் புன்செய்ப் பயிர்

கடைசிநாள் :—1932 வருடம், மே மாதம், 16 தேதி

இதற்குப் பிழையற நேரான விடை யனுப்புவார்க்கு, கலா நிலயம், 1930-வது அல்லது 31-வது வருட ஆப்லெதர்—கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று வெகுமதி யளிக்கப்படும். அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் சந்தாத் தொகையின்றி நம் பத்திரிகையை ஒரு வருடம் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இது அவர் இஷ்டத்தைப் பொருந்தியது.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதியனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். ஒருவரே, பல விடைகள் முயன்று, அனுப்பினும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றிற்கும் 4 அணா தபால் தலை யனுப்பவேண்டும்.

3. விடைகள், எம்முடைய காரியாலயத்திற்கு, அடுத்த மே மாதம் 16உக்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.

4. வந்த விடைகளில் ஒன்றுமட்டுமே பிழையில்லாது நேரா யிருக்குமாயின் அதனை அனுப்பியவருக்கு முன்னுரைத்தபடி பரிசளிக்கப்படும். நேரிய விடைகள் ஒன்றிற்கு மேற்படுமாயின், அதனை அனுப்பியவர்களின் பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப்போட்டு, யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கே அளிக்கப்படும்.

5. விடையின் நேர்மையும் மற்ற விடயங்களையும்பற்றி மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது.

6. இந்தப் போட்டியில், நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

7. விடைகள், பேர், மேல்விலாசம் முதலியன தெளிவாய் எழுதப்படல் வேண்டும்.
விடைகளை, மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, சென்னை.
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

குறிப்பு:—1. சொல்லூடாட்டத்தை விடுவிக்க முயலும் வழி தெரியாதவர், ஆங்கிலப்பயிற்சி யுள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

2. கையில் நல்ல அகராதி ஒன்றும் நிகண்டும் ஒன்றும் இருக்குமாயின் அவை, மிக்க உதவியாகும். விசுவநாதப்பிள்ளை தமிழ்—தமிழ் - ஆங்கில அகராதியும் (விலை ரூ. 6 ஸ்ரீமான் ஸ். வையாபுரிப்பிள்ளை இயற்றிய நாமதீப நிகண்டும் (விலை ரூ. 2) எம்மிடம் கிடைக்கும்.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறைபும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லேதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

பிரிட்டிஷ் மாஜி மந்திரி லாயிட் ஜியார்ஜ் அவர்கள் இனி அரசியலில் கலந்து கொள்வதில்லையென்று தீர்மானித்து அவ்வியக்கத்தினின்று விலகிவிட்டனராம்.

***

மாஜி இந்தூர் மன்னர் தமது அமெரிக்க மனைவி சர்மிஷ்டா தேவியுடன் உலகயாத்திரை செய்து இந்தியா திரும்பியுள்ளார். பம்பாயில் அவர் வந்து இறங்கியபொழுது அவருக்குப் பம்பாய் நகரத்தார் சிறந்த வரவேற்பு அளித்தார்கள். பம்பாயில் சில நாள் தங்கிப் பின் அவர் இந்தூர் செல்வார் என்றும்; அங்கு, சமஸ்தானம் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்குமென்றும் தெரிகின்றது.

***

பட்டு உற்பத்தி:—ஜப்பான் அரசாங்கப் பட்டு உற்பத்தி இலாக்கா அதிகாரி மைசூர் பட்டுத் தொழிலைப் பற்றிக் கூறுவதாவது:—

"ஜப்பானில் பட்டுத்தொழில் மிகவும் வளர்ச்சியுற்றுளது. ஜப்பான்பட்டைக் காட்டிலும் மைசூர்ப் பட்டு உயர்வானது. மைசூர்ப்பட்டுப்பூச்சிகள் உயர்ந்த ஜாதிப்பூச்சிகள். அப்பூச்சிகளை வியாதி அதிகம் தாக்கவியலாது. எனினும் 'பெப்ரையின்' என்னும் ஒரு தொத்துவியாதி தாக்குமேல் மைசூர்ப்பட்டுத்தொழில் கெட்டுவிடும். அவ்வியாதி காற்றுமூலம் பரவலாம். ஜப்பானில் வியாதித்தடைசெய்ய ஒரு சட்டம் செய்யப்பட்டுளது. அதுபோல் மைசூரிலும் செய்யப்படவேண்டும். பட்டுச்சோதனை நிலயம் ஒன்றும் நிறுவப்படவேண்டும். ஜப்பானில் பட்டு உற்பத்தி வளர்ச்சிக்குரிய வசதியும் சீதோஷ்ண ஸ்திதியும் இல்லையாயினும் அங்கு அரசாங்கத்தார் முயற்சியால் இத்தொழில் வளர்ந்து வருகின்றது மைசூரில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கான இயற்கை வசதிகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் இத்தொழில் வளர்ச்சிக்குரிய முயற்சிகள் செய்யப்படவில்லை. எனவே மைசூர் அரசாங்கத்தார் இத்துறையில் முயலவேண்டும்."

***

சுக்கூர் அணை:—சிந்துநாட்டில் சுக்கூரென்னும் நகரின்கண் பம்பாய் அரசாங்கத்தினர் 20 கோடி ரூபாய் கொண்டு ஒரு பெரும் நீர்த்தேக்கத்தை நிறுவியிருக்கின்றனர். இது உலகத்திலேயே மிகப் பெரியதான தேக்கம். எகிப்து நாட்டின் அஸ்ஸவான் தேக்கத்தைவிடவும், லண்டன் தேம்ஸ் நதியின் பாலத்தைவிடவும் இது பெரிது.

சிந்து நாட்டின் வடபாகத்திலிருந்து தெற்கு நோக்கிச் சிந்துநதி பாய்கின்றது. அம்மாகாணத்தின் பரப்பு சுமார் 47 ஆயிரம் சதுரமைல். இது ஆங்கில நாட்டைவிடப் பரப்பில் பெரிதாகும். இதன் பாதிபாகம் வெறும் பாலைவனமாக இருப்பதால் அதில் சிந்துநதியின் நீர் ஏறிப் பாயும்படி செய்து செழிப்புள்ளதாகச் செய்திருக்கின்றனர். சுமார் 4½ கோடி மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர்.

வில்லிங்டன் பிரபு பம்பாய்க் கவர்னராயிருந்த காலத்தில் முடிவாக அணை கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டு லாயிட் பிரபு தமது காலத்தில் அணையின் அஸ்திவாரக்கல்லை ஊன்றினர். இத்திட்டத்தைத் தயாரித்தவர் ஸ்ரீ. எ. எ. முஸ்டோ; நிறைவேற்றியவர் தலைமை எஞ்சினீர் சர். ஹாரிசன்.

மணற்பாங்கான நிலமாயிருந்து, சிந்துநதி அடிக்கடி தன் போக்கை மாற்றுவதாயிருந்தும், லட்சியம் செய்யாமல் அணையானது கட்டப்பட்டது. சுக்கூரிலிருக்கும் லாயிட் அடைப்பே மிகப்பெரிது. அது ஒரு மைல் நீளம். அவ்விடத்தில் சிந்துநதியின்மீது ஒரு மைல் அகலத்தில் இரு பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இது லண்டன் பாலத்தைவிட ஐந்து மடங்கு பெரியது. இந்த அடைப்பில் 66 கதவுகளிருக்கின்றன. ஒவ்வொன்றும் 60 அடி நீளமும் 50 டன் நிறையுமுடையது. இவ்விடத்தில் நதியின் நீரைப்பாய்ச்சப் பல கால்வாய்கள் தோண்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் மூன்று, சூயஸ்கால்வாயையும்விடப் பெரியன. இடது பக்கத்திலிருக்கும்மிகப்பெரிதான ரோஹ்ரிக்கால்வாய் கிழக்கு நாரப்பிரதேசம், கெய்ப்பூர் சமஸ்தானம் முதலிய இடங்களுக்குப் பாய்கிறது. ரோஹ்ரிக்கால்வாய் ஹைதராபாத்திற்கு (சிந்து) தெற்கே சுமார் 30 மைல் வரை வருகின்றது. அது 205 மைல் நீளமும் 2300 மைல் வரை பரவியுள்ள கிளைகளை யுடையதுமானது. பானமாக் கால்வாயைவிட நான்கு மடங்கு பெரிது. கிழக்கு நாராக் கால்வாயென்பது கட்சுக் கடற்கரை வரை வருகிறது நதியின் வடகரையிலிருந்து மூன்று பெரும் கால்வாய்கள் பிரிந்தோடுகின்றன. வடமேற்குக் கால்வாய் 100 மைல் நீளமும் 500 மைலுக்குப் பரவியுள்ள கிளைகளையு முடையது.

மத்திய அரிசிக் கால்வாய் சுமார் 87 மைல் நீளமுடையது. நெல் விளையக்கூடிய பிரதேசத்தில் பாய்வதால் இதற்கு இக்காரணப் பெயர் வந்தது. எல்லாக் கால்வாய்களும் சுமார் 80 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு ஜலவசதி அளிக்குமென நம்பப்படுகிறது. ரோஹ்ரிக் கால்வாய் மாத்திரம் சுமார் 20 லட்சம் ஏகருக்குத் தண்ணீர் கொண்டுபோகும். சிந்து நாட்டில் இப்பொழுது விவசாயத்திலிருக்கும் நிலத்தின் பரப்பு 40 லட்சம் ஏக்கரே. நெற்பயிருக்கு 8 லட்சம் ஏக்கரும், பஞ்சு உற்பத்திக்கு 20 லட்சம் ஏக்கரும், கோதுமை எண்ணெய் வித்துகள் முதலியவைகளுக்கு 32 லட்சம் ஏக்கரும் சாகுபடிக்கு வருமென்று எண்ணப்படுகிறது.

200 லட்சம் டன் நிறையுள்ள தானியங்களும் பஞ்சும் இந்நிலங்களில் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் என்று கருதப்படுகிறது. இது 1934-ம் ஆண்டில் முற்றும் முடிவுறும். இதற்கு அதுவரை எடுக்கப்பட்ட காலம் பத்தாண்டாகும்.

ஆதியில் நதியின் போக்கு அணையைக் கெடுத்துவிடும் என்றிருந்த பயம் இப்பொழுதில்லை. 1929-ம் 30-ம் ஆண்டு வெள்ளங்கள் இதைச் சிறிதேனும் சிதைக்கவில்லை. ஆனால் எண்ணியபடி விளைபொருள்கள் விளையுமா என்பது போகப் போகத்தான் தெரியும்.

எவர் காலத்தில் திட்டம் வகுக்கப்பட்டதோ அவரே - வில்லிங்டன் பிரபுவே - சென்ற ஜனவரி மாதம் 13-ம் தேதியன்று கால்வாய்களைத் திறந்துவைத்தார். இத்தனைநாள் பெரும் பாலைவனமாயிருந்த ஒருநிலம் நாளை பெருஞ்சோலையாக மாறப்போவதைக் காணப் போகிறோம்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. [illegible]. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5 மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, [illegible] போஸ்ட், மதராஸ்

188964

KALANILAYAM
Reg. No. M. 2324.

ஆங்கில ஆசான்

எமதுலேடி டிரேட் மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

60 நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிகப் பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் அச்சியற்றியுள்ளோம். இதுவரை 53100 புத்தகங்கள்செலவாயுளது இதன் மேன்மைக் கடையாளம். இப் பத்தாம் பதிப்பு ஆங்கில வாசாணைப்போல், வேறு எப்புத்தகமும் சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவாது. நம் முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர் கூட 10-வது பதிப்பை வாங்கவேண்டும். இதில் 1 அணு முதல் 3000 ரூபாய் வரைச் சம்பளம் வாடகைக் கணக்குளது. 800 பக்கங்களுக்கு மேற்கொண்ட அழகிய சிமைக் கலிக்கோ பயிண்டுடையது.

விலை ரூ 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்
திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பெற்ற நூல்கள்

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ருபா **0-6-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

கலா நிலயம் ஆபீஸ்,
வேளாளர் தெரு, புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச்செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)